LECO

வரையறுக்கப்பட்ட லங்கா
மின்சார (தனியார்) கம்பனி

2019

வருடாந்த அறிக்கை

வளர்ச்சிக்கான எமது பாதை

லெகோ நிறுவனம் தனது ஆரம்பித்தலிருந்து முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தொடர்ச்சியான இலாப வளர்ச்சி, சிறந்த விநியோகத் தரம், நிலையான நியமங்கள் மற்றும் உயர்ந்த வாடிக்கையாளர் திருப்தியுடன் அதனது விநியோகச் சேவை வணிகத்தை கேள்வி மற்றும் நிரம்பலுக்கேற்ப விநியோகித்து தனது செயலாற்றுகையை கணிசமானளவு முன்னேற்றியுள்ளது என்பதை பெருமையுடன் அறிவிக்கின்றது.



எமது தூரநோக்கு

புத்தாக்க, சுற்றாடல் தோழமையுள்ள வணிகத்தினூடாக மக்களின் வாழ்விற்கு வெளிச்சத்தை வழங்கி மகிழ்வுறுதல்

எமது விழுமியம்

தகுதியும் ஆற்றலும் மிக்க பணியாளர்கள் மூலம் உற்பத்தித்திறன் மற்றும் இலாமீட்டல் ஆகிய இலக்குகளை அடைந்து நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சுற்றாடலொன்றினுள் மின்சார சேவை விநியோகத்தை மேம்படுத்தி அயராத அர்ப்பணிப்புடன் புத்தாக்க சேவைகளை வழங்கி வாடிக்கையாளர்களைத் திருப்தியடையச் செய்தல்.

எமது இலட்சியம்

தொடர்ச்சியான புத்தாக்கத்தினூடாக சமூகத்திற்கு மிகச்சிறந்த எரிசக்தி தீர்வுகளை வழங்குதல்

MB 116A
B16
6000
3

உள்ளடக்கம்

கூட்டிணைப்புத் தகவல்கள்	06
தலைவரின் செய்தி	07
பொது முகாமையாளரின் செய்தி	08
டிஜிரல் மயமாக்கல்	09
செயன்முறை டிஜிரல்மயமாக்கல்	11
பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை	13
பொறியியலாளர் பிரிவு	20
வலைப்பின்னல் டிஜிரல்மயமாக்கல்	23
செயற்பாட்டுப் பிரிவு	24
மனித வளம் மற்றும் நிர்வாகம்	28
நிதிசார் மீளாய்வு	30
உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு	32
வாடிக்கையாளர் உறவுமுறை டிஜிரல்மயமாக்கல்	34
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	35
இலாபம் அல்லது நட்டம்	40
ஏனைய முற்றுமுடங்கிய வருமானக் கூற்று	41
நிதி நிலைமைக் கூற்று	42
உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று	43
காசுப் பாய்ச்சல் கூற்று	45
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள்	46
செயலாற்றல் குறிகாட்டிகள்	90
வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல்	93
பதிலியின் படிவம்	95

கூட்டிணைப்புத் தகவல்கள்

சட்ட வடிவம்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் கீழ் 1983 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு தனியார் பொறுப்புக் கம்பனியாகும்.

பணிப்பாளர் சபையின் தற்போதைய உறுப்பினர்கள்:

திரு. எம்.பி.ஏ.பி. தி சில்வா (தலைவர்)
திரு. எச்.எம்.வீ. ஹேரத்
திரு. டீ.டீ.கே. கருணாரத்ன
திரு. பி. அல்கம
திரு. என்.பி.கே. ரனவீர
தி. ஜே.எஸ். விதானகே
திரு. ஆர்.எம்.டீ. லக்ஸ்மன்

துணைக் கம்பனிகளின் தற்போதைய உறுப்பினர்கள்.

அன்டே லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட்

திரு. எம்.பி.ஏ.பி. தி சில்வா (தலைவர்)
திரு. டீ.டீ.கே. கருணாரத்ன
திரு லியு ஜியான்வு
திரு சென் டிங்யுங்
கலாநிதி பி.எஸ். நரேந்திர தி சில்வா

லெகோ புரஜெக்ட் (பிரைவட்) லிமிடட்

திரு. எம்.பி.ஏ.பி. தி சில்வா (தலைவர்)
திரு. எஸ்.எல். ஜயசேகர

கம்பனியின் செயலாளர்

பி.டபிள்யூ. கோர்பெரேட் செக்ரெடெரியல் (பிரைவட்) லிமிடட்,
இலக்கம் 3/17 கிங்சி வீதி கொழும்பு 08.

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

இலக்கம் 411, காலி வீதி
இ.எச். குரே கட்டிடம்
கொழும்பு 3

வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
கொமர்ஷியல் வங்கி பி.எல்.சீ.
ஹற்றன் நெஷனல் வங்கி பி.எல்.சீ.
நேஷன் ட்ரஸ் வங்கி பி.எல்.சீ.
மக்கள் வங்கி
சம்பத் வங்கி பி.எல்.சீ.
செலான் வங்கி பி.எல்.சீ.
ஸ்டான்டெட் சார்ட்டெட் வங்கி
அரச ஈட்டு முதலீட்டு வங்கி
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சீ.
த ஹொங்கொங் என்ட் சங்கை பேங்கிங் கோபரேஷன் லிமிடட் (HSBC)
தேசிய சேமிப்பு வங்கி (NSB)
DFCC வர்த்தன வங்கி பி.எல்.சீ.
பேன் ஏசியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சீ. PABC
கொழும்பு யூனியன் வங்கி பி.எல்.சீ.
வரையறுக்கப்பட்ட NSB நிதி முகாமைத்துவக் கம்பனி

தலைவரின் செய்தி

கம்பனியின் 36 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு எமது பெறுமதிமிக்க பங்குதாரர்களை வரவேற்க கிடைத்தமை குறித்து நான் பெறுமகிழ்சி அடைவதுடன் அதற்காக இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன்.

மின்சார விநியோகத் துறையில் உயர் தொழில்நுட்ப, புத்தாக்க மற்றும் பயன்பாட்டுச் சேவை வழங்குநராக உருவாவதற்கு எமது கம்பனி ஆரம்பிக்கப்பட்டது முதல் கரடு முரடான பாதைகள் பலவற்றைக் கடந்து 37 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட முதிர்ச்சியினைப் பெற்றுள்ளது. நவீன, வினைத்திறன் மிக்க மற்றும் வாடிக்கையாளர் சார்ந்த பொது முயற்சியொன்றாக இருந்து வாடிக்கையாளர்களிற்கு பெறுமதி மிக்க அத்தியாவசிய சேவையினை வழங்கிவருவதன் மூலம் அதன் எதிர்பார்ப்புகளிற்குள் நின்று செயற்படுவதற்கு கம்பனிக்கு முடிந்துள்ளது.

மீளாய்வாண்டின் போது, கம்பனியின் ஒட்டுமொத்த செயலாற்றல் திருப்திதரக் கூடியதாக உள்ளது. குழுமத்தினால் உழைக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 33.710 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை ரூபா 2.735 பில்லியன் ஒட்டுமொத்த தேறிய இலாபம் ஈட்டப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட செயற்பாட்டுச் செலவின எல்லைக்குள் நின்று கம்பனிக்கு செயற்பட முடிந்திருந்ததுடன், ரூபா 195.74 மில்லியன் அனுமதிக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட இலாபத்தை உழைக்க முடிந்திருந்தது. இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உதவிய மற்றும் ஒத்துழைப்பு நல்கிய எமது வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் அனைத்து ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆண்டு முழுவதும் சாதித்த சாதனைகளிற்கு தலைமைத்துவத்தினை வழங்கி வழிகாட்டியமைக்காக கௌரவ மின்வலு அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அத்துடன், எமது பிரதான பங்குதாரரும் தொழிற்துறை தலைவராகவும் செயற்படுகின்ற இலங்கை மின்சார சபைக்கு எனது பாராட்டுதல்களையும் உளப்பூவமான நன்றியினையும் இத்தருணத்தில் மறவாது தெரிவித்துக் கொள்கின்றேன். எமது வெற்றிப் பாதைக்கு வழியமைத்துத் தந்த எமது ஒழுங்கமைப்பாளரான இலங்கை பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், கம்பனியினை வழிநடாத்துவதற்கு தமது அறிவையும் அனுபவத்தையும் வழங்கி உச்சபட்ச ஆதரவினை வழங்கிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களிற்கு எனது பாராட்டுதல்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களது ஆதரவு கிடைக்காதிருக்காவிட்டால் இந்த வெற்றிகள் சாத்தியமற்றுப் போயிருக்கும்.

எமது வணிகத்துடன் இணைந்தவர்களான வங்கியாளர்கள், வழங்குநர்கள், கம்பனிச் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர்களிற்கு அவர்கள் நல்கிய சேவைக்காக எனது விசேட நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், இந்த வெற்றியினை அடைந்து கொள்வதற்காக எமது சிரேʻட முகாமைத்துவத்தினர் மற்றும் பதவியணியினர் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பு, பொறுப்புணர்ச்சி மற்றும் கடமையுணர்வுக்காக அவர்களிற்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.பி.ஏ.பி. தி சில்வா
தலைவர்

பொது முகாமையாளரின் செய்தி

சிறந்த செயற்திறனும் வெற்றியும் அடையப்பெற்ற மற்றுமொரு வருடத்தை நாங்கள் பதிவுசெய்துள்ளோம் என்று அறிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன். கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகள் (குழுமம்) ரூபா 33.71 பில்லியன் வருமானத்தைப் பதிவுசெய்திருந்ததுடன் இது கடந்த ஆண்டைவிட 6 சதவீத அதிகரிப்பாகும். வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் இன் முதலீட்டிலிருந்து கிடைத்த அதிக பங்குலாபத்துடன் ரூபா 2.73 பில்லியன் சிறந்த இலாபத்தை நாம் பதிவுசெய்துள்ளோம்.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் ஒழுங்கமைக்கப்படுகின்ற எமது பிரதான மின்சார விநியோக வணிகம் உத்தம செயலாற்றலைக் காண்பித்துள்ளது. நாங்கள் ஒழுங்குபடுத்தல் இலக்குகளை விஞ்சிச் செயற்பட்டு, எமது வாடிக்கையாளர்களிற்கு மிகச் சிறப்பான சேவையினை வழங்கியுள்ளோம்.

எமது குறைந்த இழப்புக்கள் மற்றும் உத்தம முகாமைத்துவம் காரணமாக நாங்கள் நினைத்ததைக் காட்டிலும் அதிக இணக்கப்பாட்டு நிலைமைகளையும் அதிக இலாபத்தையும் பதிவுசெய்துள்ளோம். ஒழுங்குபடுத்தி அனுமதித்திருந்த கிரயத்தில் எம்மை இயக்கிச் செல்வதற்கு நாம் மேற்கொண்ட கடுமையான முயற்சி இதற்கு மேலும் பங்களித்திருந்தது.

எமது வாடிக்கையாளர் சேவைகள் பாரம்பரிய காகித அடிப்படையிலமைந்த முறைமையிலிருந்து நவீன டிஜிட்டல் மயமாக்கப்பட்ட யுகத்திற்கு இடம்பெயரத் தொடங்கியுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட வலைப்பின்னல் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் ஊடாக எமது மூலதன வலைப்பின்னல் மிகப் பெரும் உருமாறும் கட்டத்திற்காக காத்திருக்கின்றது.

செயன்முறை நவீமயப்படுத்தலுக்கான எமது இலட்சிய நோக்கமானது, எமது வலைப்பின்னலை ஸ்மார்ட் ஆக்குதல் மற்றும் எமது வாடிக்கைளார்களிற்கு மேம்பட்ட டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சேவைகளை வழங்குவதன் ஊடாக சிறந்த முன்னேற்ற நிலையில் உள்ளது. கம்பனி, அதன் சிறந்த செயலாற்றலை பொதுமக்களிற்கு வழங்கும் அதேவேளை பல்வேறு செயற்திட்டங்கள் ஊடாக நிறுவனரீதியான சமூகப் பொறுப்பையும் கவனித்து வருகின்றது.

எமது முகாமைத்துவம், வெளிப்படையான வாடிக்கையாளர் பங்கேற்பு செயன்முறைக்கு மாற்றமடைந்து வருகின்றமையால், நாம் ஒரு உருமாறும் சகாப்தத்தை எதிர்கொண்டுள்ளோம். கடுமையான அழுத்தங்கள் மற்றும் சிக்கல்களிற்கு மத்தியில் இந்த ஆண்டில் நாம் காண்பித்த முன்மாதிரியான செயன்முன்னேற்றம், இந்த சவால்மிக்க உருமாற்றத்திற்கு எமக்கு சக்தியையும் நம்பிக்கையையும் வழங்கியுள்ளது.

கலாநிதி பி.எஸ். நரேந்திர தி சில்வா
பதில் பொது முகாமையாளர்

டிஜிட்டல் மயமாக்கலிற்கு மாறுதல்

எங்கள் நிறுவனத்தின் ஆரம்பம் முதலே உலகமயமாதல் மற்றும் அதன் போக்குகளைக் கருத்திற்கொண்டு ஒரு தனித்துவமான சேவையினை வழங்குவதன் மூலம் தனியொரு நிறுவனமாக வளர்வதற்கு நாங்கள் எப்போதும் எதிர்பார்க்கின்றோம். கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் தொழில்நுட்பமானது தினமும் முன்னேற்றமடைந்து வருகின்றது. ஸ்மார்ட் தொலைபேசிகள் மக்களின் அன்றாட நடவடிக்கைகளிற்கு இன்றியமையாத வாழ்வாதாரத் தேவையாக மாற்றமடைந்துள்ளன. இந்தப் போக்குகள் குறித்து பீதியடைவதற்குப் பதிலாக, ஒரு முன்னோக்கு சிந்தனைமிக்க நிறுவனமாக எமது வணிகத்தை எவ்வாறு மாற்றியமைப்பது எவ்வாறு என்பது குறித்து நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். இதன்மூலம் பின்னடைவதற்குப் பதிலாக, இந்த வணிகத்தை உலக அளவில் செழிக்கவைக்க எமக்கு முடியும்.

வாடிக்கையாளர் நடத்தை அடிப்படையில் சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் போக்குகள் குறித்து நாங்கள் அறிவோம். கடந்த சில ஆண்டுகளாக இலங்கையிலும் உலகிலும் கூட சமூக ஊடக நுகர்வு வியத்தகு முறையில் அதிகரித்துள்ளது. முன்பை விட ஆன்லைனில் ‘ ாப்பிங் செய்வதற்கும் ஆன்லைனில் கட்டணம் செலுத்துவதற்கும் மக்கள் பழகி வருகின்றனர். மக்கள் பொதுவாக எந்த நாளிலும் இணையத்தில் குறிப்பாக இளைய தலைமுறையினரில் அதிக சதவீத நேரத்தை செலவிடுகிறார்கள். கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் புதிய மொபைல் பயன்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு மக்கள் தங்கள் வாழ்க்கையை கொஞ்சம் எளிதாக்குவதற்காக பதிவிறக்கம் செய்து நுகர்வதற்கு பழகியுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட கிரெடிட் / டெபிட் கார்டுகளைப் பயன்படுத்த மக்களை ஊக்குவிப்பதற்காக வங்கிகள் பணமில்லா பரிவர்த்தனை வாய்ப்புகளுக்கான பாதுகாப்பான உள்கட்டமைப்பை அறிமுகப்படுத்துகின்றன. எனவே இந்த போக்குகள் ஒரு பயன்பாட்டு நிறுவனமாக எங்களுக்கு உருவாக்கிய சவாலையும் வாய்ப்பையும் நாங்கள் உணர்கிறோம். எங்கள் நிறுவனத்தின் எதிர்காலத்திற்கான எங்கள் மூலோபாய திட்டங்களை உருவாக்கும்போது இந்த சமூக-பொருளாதார மாற்றங்களை கருத்தில் எடுத்துக்கொள்வது தவிர்க்க முடியாதது.

டிஜிட்டல்மயமாக்கல் எங்கள் தற்போதைய கவன மையமாக உள்ளது. ஏனெனில் எங்கள் நிறுவனத்தை முறையாக செயல்படுத்துவதன் மூலம் அதிக அளவு நன்மைகளை அறுவடை செய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். அதற்காக அதிகபட்ச அளவிலான உற்பத்தித்திறனை உற்பத்தி செய்வதற்காக எங்கள் வணிகத்தில் எந்தெந்த பிரிவுகளை டிஜிட்டல் மயமாக்கலில் ஈடுபடுத்த வேண்டும் என்பதை நாங்கள் கவனமாக பகுப்பாய்வு செய்கிறோம். புதிய தொழில்நுட்பத்துடன் சரிசெய்யக்கூடிய வணிகப் பிரிவுகள் அல்லது குறிப்பிட்ட சிக்கல்களை நாங்கள் கண்டறிந்ததும் அவற்றில் டிஜிட்டல் மயமாக்கல் உத்திகளை செலுத்துவதன் மூலம் திட்டங்களை உருவாக்குகிறோம்.

கவனமாக திட்டமிட்டு டிஜிட்டல்மயமாக்கல் உத்திகளை செயல்படுத்துவது ஒரு நிறுவனத்தில் டிஜிட்டல் மாற்றத்திற்கான திறவுகோல் மற்றும் அதன் வெற்றியாகும் என்பதனை நாம் புரிந்து வைத்துள்ளோம்.. இந்த நேரத்தில் நாங்கள் எங்கள் வணிக இலக்குகளுடன் ஒத்துப்போகும் என்று நம்பும் 3 முக்கிய டிஜிட்டல்மயமாக்கல் கருத்துகளுக்கு முன்னுரிமை அளிக்கிறோம். அந்த கருத்துக்களை “உள் டிஜிட்டல் மயமாக்கல்”, “நெட்வொர்க் டிஜிட்டல்மயமாக்கல்” மற்றும் “வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம் (சிஆர்எம்)” என்று சுருக்கமாகக் கூறலாம். நாங்கள் அனைவரும் கற்பனை செய்த வெற்றிகரமான இறுதி முடிவுகளை உருவாக்கும் வரை எங்களது அனைத்து முயற்சிகளையும் முன்வைத்து எங்கள் டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களை நிறைவேற்றுவதில் தொடர்ந்து பணியாற்றுவோம். பின்வரும் அத்தியாயங்கள் எங்கள் டிஜிட்டல் மயமாக்கல் உத்திகளைப் பற்றி விரிவாக விவாதிக்கின்றன.

தாள்கள் அற்ற அலுவலகம்
குறைவான பௌதீக இருப்பு
டிஜிட்டல் பாதுகாப்பு.

செயன்முறை டிஜிட்டல்மயமாக்கல்

டிஜிட்டல் மயமாக்கல் அமுல்படுத்தப்படுகையில் முதலீட்டின் மீது குறிப்பிடத்தக்க திரும்பலொன்றை உழைக்கும் உறுதிமொழியுடன் எமது கம்பனியிலுள்ள பிரிவுகள் மீது கவனம் செலுத்துவதே எமது பிரதான இலக்காக உள்ளது. டிஜிட்டல் மயமாக்கலின் ஊடாக எமது உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்காக நாம் எதிர்பார்த்துள்ள எமது பிரதான விடயப் பிரப்பாக எமது உள்ளக செயற்பாட்டுச் செயன்முறைகள் காணப்படுகின்றன. ஒரு பயன்பாட்டுச் சேவைக் கம்பனி என்ற வகையில், எமது செயற்பாடுகளின் வினைத்திறனிலேயே எமது சேவையின் தரம் தங்கியிருக்கின்றது. ஆகையால், பயன்பாட்டுச் செயற்பாட்டு முறைமையில் தங்கியுள்ள டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடான எமது மின்பரிமாற்றம், எமது இலக்குகளை வினைத்திறனாக அடைந்துகொள்ள எமக்கு உதவுகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு, உள்ளகச் செயற்பாட்டு செயன்முறைகளிற்கான எமது டிஜிட்டல் மயமாக்கலிற்கு மிகவும் உகந்தவை என பின்வரும் அளவீடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கம்பனியில் டிஜிட்டல் மயமாக்கலை பிரயோகிக்கக் கூடிய ஒரு முறையாக தாள்கள் அற்ற அலுவலக எண்ணக்கருவை அடைந்துகொள்வது காணப்படுகின்றது. வழமையாக ஒரு அலுவலகம் தாள்களின் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் அதன் வினைத்திறனை அதிகரிக்க எதிர்பார்க்கின்றது. தாள்கள் பயன்படுத்தப்படுவதனைக் குறைத்து இந்த அனைத்துக் கருமங்களையும் டிஜிட்டல் மயமாக்குவதற்கான ஆற்றல் காணப்படுமாயின் கம்பனியின் இலாபத்திற்கும் வாடிக்கையாளர்களிற்கும் உயர்பெறுமதியினை வழங்கக் கூடியதாக இருக்கும்.

தாள்கள் அற்ற கலாச்சாரம் எமது கம்பனிக்கு பல்வேறு வகையில் நன்மையபக்கும் என நாம் நம்புகின்றோம். வாடிக்கையாளர் முறைப்பாடுகள் முதல் உள்வாரியான அலுவலக ஆவணப்படுத்தல் செயன்முறை வரை இதன் மூலம் பெருமளவு நன்மையடையும். வழமையில் “உரிய நேரத்தில் உரிய இடத்தில் பௌதீக பிரதிகள் இல்லாதிருத்தல்” என்பது தாள்களைப் பயன்படுத்தும் அலுவலகமொன்றின் வினைத்திறமையின்மைக்கு வழிவகுகின்றது. இன்னொரு வகையில், டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அலுவலகமொன்றில், இந்த ஆவணங்களை மிகவும் வசதியாக வினாடிப்பொழுதில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும், “தேடும் நேரத்தை” குறைப்பதன் மூலம், கம்பனியின் காலநேரத்தை குறிப்பிடத்தக்களவில் இது சேமிக்கின்றது.

உள்வாரிச் செயன்முறைகளை பல்வேறு வழிகளில் துரிதப்படுத்துவதற்கு டிஜிட்டல் மயமாக்கல் எண்ணக்கருவின் அமுல்படுத்தல் வழிவகுக்கும் என நாம் திடமாக நம்புகின்றோம். தாள்களின் அடிப்படையிலமைந்த அலுவலகத்திற்கு தேவையான வளத்தினை இதன்மூலம் குறைக்க முடியுமாக இருப்பதனால் நிறுவனத்தின் கிரயத்தை குறிப்பிடத்தக்களவில் இது குறைக்கும். அதாவது, தாளிற்கான கிரயம், அவற்றை களஞ்சியப்படுத்தல் கிரயம், அதன் மேற்பார்வைக்கான ஊழியக் கிரயம் ஆகியவற்றை தாள்களற்ற அலுவலகத்தின் மூலம் நீக்க முடியும். அது நேரத்தை மட்டும் சேமிப்பதுடன் நின்றுவிடாது, அலுவலகத்தினை சுத்தப்படுத்தி பௌதீக இடத்தையும் சேமிக்கின்றது. தூய்மையான அலுவலகச் சூழல் அதன் உற்பத்தித்திறனை அதிகரிக்கின்றது என்பதை நினைவில் கொள்ளவும்.

எமது கம்பனியில் டிஜிட்டல் மயமாக்கல் அலுவலகச் செயன்முறைப் பிரயோகத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்காக, தாள்கள் அற்ற அலுவலக எண்ணக்கருவை அமுல்படுத்துவதன் ஊடாக சிறந்த பெறுபேறுகள் அடையப்படுவதன் சாத்தியத்தினை முன்னேற்றுவதற்காக புதிய செயலாற்றல் மதிப்பீட்டு முறைமையினையும் ஆவணங்களை தேடும் முறைமையினையும் தாபித்து அதனை அணுகும் முறையினை நாம் கண்டறிந்துள்ளோம். அதேவேளை, எங்கள் தாள்களற்ற அலுவலக கலாச்சார உத்திகள் மேலோங்குவதற்கு உறுதுணையான உட்கட்டமைப்பை உருவாக்குவது அவசியமாக உள்ளது. எனவே, தேவையான துணை வன்பொருள் வளங்களுடன் எங்கள் அலுவலகத்திற்குத் தேவையான வசதிகளை நாம் கொள்வனவு செய்கின்றோம். எங்கள் உள்வாரிச் செயன்முறைகளில் நாம் மேற்கொள்ளவிருக்கும் இந்தப் புதிய மாற்றங்களுக்காக நாம் உறுதியாக இருப்பதனால், எமது தாள்களற்ற கலாச்சாரம் கட்டமைக்கப்படவுள்ள அனைத்து தளங்களையும் வலுப்படுத்துவதன் மூலம், எமது பயணத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு தடையினையும் முற்றிலும் தவிர்க்க முடியுமென நாம் நம்புகின்றோம்.

ஒரு மாற்றத்தை செய்வதற்காக எங்களது நிறுவனத்தில் எடுக்கப்படுகின்ற ஒவ்வொரு நடவடிக்கையினதும் வெற்றிக்கு, எங்கள் ஊழியர்களின் ஒருங்கிணைப்பு மிக முக்கிய காரணியாக காணப்படுகின்றது. அவர்கள் இக்கருமத்துடன் சார்ந்துள்ளார்கள் என்பதனையும் இந்த உத்திகளை மனதிற்கொண்டு சரியான திசையை நோக்கிச் செல்ல விருப்பத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுகின்றார்கள் என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, தாள்களற்ற அலுவலகச் சூழலை எவ்வாறு மாற்றியமைப்பது மற்றும் பரிணமிப்பது என்பது தொடர்பில் ஊழியர்களிற்கு பயிற்சி அளிக்கப்படும்.

உள்வாரி டிஜிட்டல் மயமாக்கலின் கீழ் நாங்கள் முன்னெடுப்பதற்குக் கருதும் மற்றொரு முக்கியமான நடவடிக்கை “கனணி ஒருங்கிணைப்பாகும்”. “கிளவுட்” அடிப்படையிலமைந்த தகவல் தளத்தின் உதவியுடன், எங்களது

செயன்முறை டிஜிட்டல்மயமாக்கல் (தொடர்ச்சி...)

உள்வாரிச் செயன்முறையுடன் தொடர்புடைய முறைமைகளின் ஊடாக நகர்த்தப்படும் எங்கள் தகவல்களின் நேர்மையான மற்றும் வெளிப்படையான தன்மையினை விரிவுபடுத்த நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அத்துடன், தரவுப் பகுப்பாய்வு மற்றும் செயன்முறைப்படுத்தல் நேரத்தைக் குறைப்பதன் மூலம் எமது கம்பனியில் தேவையற்ற விதத்தில் செலவிடப்படும் நேரத்தைக் குறைப்பதற்கு ஒரு ஒருங்கிணைந்த முறைமை உதவும்.

கொள்வனவு என்பது எமது செயற்பாடுகளில் ஒரு பிரதான அங்கம் என்பதனை நாம் அறிந்து வைத்துள்ளோம். எமது டிஜிட்டல் மயமாக்கல் உத்திகளின் மூலம் அதனை இலத்திரனியல் கொள்வனவுத் தளத்திற்கு முழுமையாக நகர்த்த நாம் உத்தேசித்துள்ளோம். அனைத்து தேசிய மற்றும் சர்வதேச கூறுவிலை தாரர்களும் போட்டிமிக்க சூழலில் தமது கூறுவிலைகளை முன்னிலைப்படுத்தக் கூடியதாக இருக்கும். மேலும், முக்கியமாக தாள்களின் மூலமான தொடர்புகள் நீக்கப்படுவதனால், பௌதீக ரீதியில் தாள்களற்ற நிலை உருவாக்கப்பட்டு எங்களது டிஜிட்டல் மயமாக்கல் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு இந்த தாள்களற்ற கலாச்சாரம் உதவியாக அமையும்.

எமது முறைமை ஒருங்கிணைப்பு முயற்சிகள், பல்வேறுபட்ட விடயப்பரப்புகள் மீது விரிவுபடுத்தப்படுகின்றது. தொழில்முயற்சி வளத் திட்டமிடல் (ஈஆர்பி) முறைமை, பட்டியலிடல் முறைமை, மனித வளத் தகவல் முறைமை (எச்ஐஆர்எஸ்), பொதுப் பேரேடு, எரிசக்தி முகாமைத்துவ முறைமை (ஈஎம்எஸ்), உயர் முகாமைத்துவ விநியோக முறைமை (ஏடீஎம்எஸ்), வாகன முகாமைத்துவ முறைமை மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை (எம்ஐஎஸ்) போன்ற முறைமைகளை இவற்றை ஒழுங்கமைத்து ஒருங்கிணைக்கும் வழிமுறையான ஏபிஐ நுழைவாயிலை உருவாக்குகையில் நாம் பிரதானமாக கவனத்தில் எடுக்கின்றோம்.

முறைமை ஒருங்கிணைப்புடன் இணைந்ததாக நாம் காலடிவைக்கும் இன்னொரு படி, ஐஓரீ (இன்டர்நெட் ஒ.்.ப் திங்ஸ்) போன்ற முன்னேற்றகரமான தொழில்நுட்ப வழிமுறைகளை அறிமுகப்படுத்தும் உத்தேசமாகும். ஐஓரீ ஒரு மையப்படுத்திய தரவுத்தளத்தின் வகிபாகத்தை கொண்டிருப்பதுடன் அனைத்து முறைமைகளையும் ஒருங்கிணைத்து, எந்தவொரு பாரிய சிரமமும் அல்லது தவறும் இல்லாது முன்னும் பின்னுமாக மாற்றியமைப்பதற்காக பெரியளவிலான தகவலை எளிதாக்குகின்றது.

டிஜிட்டல் மயமாக்கல் மூலம் எமது மனிதவள தகவல் முறைமையில் (எச்ஆர்ஐஎஸ்) சிறந்துவிளங்க நாம் தொடர்ச்சியாக கவனம் செலுத்துகின்றோம். மனித வளத் தகவல் முறைமை கம்பனியில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதனை ஒப்பக்கொள்ள வேண்டியுள்ளதுடன், மனிதவளத் தகவல் தொடர்பாக முறையான டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், அது நிறுவனத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என நாம் நம்புகின்றோம். எங்களது மனிதவள மற்றும் நிர்வாக செயற்பாடுகளை மறுசீரமைப்பதே அதற்கான ஒரு சிறந்த ஆரம்பமாகும். மனித வளப் பிரிவின் அடிமட்டத்திலிருந்து இடம்பெறவேண்டிய டிஜிட்டல் மயமாக்கல் பரிணாம மாற்றம் என நாம் நம்புகின்றோம். ஆகையால், புதிய மனிதவள மற்றும் நிர்வாக கொள்கையினை அறிமுகப்படுத்தி அதனை அடைதல் வேண்டும். இதன்மூலம் மனிதவள தகவல் மற்றும் நிர்வாகம் தொடர்பிலான பாரம்பரிய நடைமுறைகளிலுள்ள குறைபாடுகளை நீக்க முடியும். அத்துடன், ஒரு புதிய கொள்கையானது, மனித வளத் தகவல்களில் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகளிற்கு உறுதியான அடித்தளமொன்றை அமைத்து அதனை சிறப்பாக முன்னேற்றமடையச் செய்யும்.

எமது ஆர்வமுள்ள தரப்பினர்களின் எாத்ர்பார்ப்புகளிற்கு ஏற்ப அவர்களிற்கு விசுவாசமாக இருப்பதற்கு எம்மை நாம் எப்போதும் அர்ப்பணித்துள்ளோம். எனவே, டிஜிட்டல் மயமாக்கல் செயன்முறைகள் மூலம் எங்களது ஆர்வமுள்ள தரப்பினர்களுடனான தொடர்புகளை எளிதாக்குவதற்கான அணுகுமுறையில் நாம் ஈடுபட்டுள்ளோம். கம்பனிக்கும் அதன் ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கும் இடையே நம்பகரமான தகவல் பாய்ச்சல் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக நாம் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களுடன் தொடர்பாடல்களை மேற்கொள்கின்றோம். மேலும், இது எமது ஆர்வமுடைய தரப்பினர்களிடம் எங்களது நேர்மை மற்றும் வெளிப்படையான தன்மையினை வெளிப்படுத்திப் பராமரிக்க உதவுகின்றது.

கம்பனியின் நிலைவரம் மீதான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனியினது பணிப்பாளர்கள் சபை, கம்பனியினதும் அதன் குழுமத்தினதும் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அடங்கிய வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பிக்கின்றது.

இந்த அறிக்கை 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளால் வழிநடாத்தப்படுகின்ற முக்கியமான தகவல்களை வழங்குகின்றது.

கம்பனி தொடர்பான தகவல்கள்

கம்பனியினதும் அதனது துணைக் கம்பனிகளினதும் முக்கிய செயற்பாடுகள்

கம்பனியின் முக்கிய செயற்பாடாகிய மின்சார சில்லறை வணிகச் செயற்பாடுகள் குறித்த ஆண்டு காலப்பகுதியில் மாற்றமின்றி அவ்வாறே காணப்பட்டன. கம்பனி இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மற்றும் அதனால் நிருவகிக்கப்படுகின்ற தேசிய மின்சார முறைமையிலிருந்து மின்சாரத்தை தொகையளவில் கொள்வனவு செய்து, கம்பனி நிருவகிக்கின்ற ஒரு நவீன மின்சார விநியோக முறைமையினூடாக மின்சார வாடிக்கையாளர்களுக்கு அதனைப் பகிர்ந்தளிக்கின்றது.

துணைக் கம்பனிகளும் அவற்றின் முக்கிய செயற்பாடுகளும் கீழே தரப்பட்டுள்ளன.

லெகோ ப்ரொஜெக்ட்ஸ் (பிரைவட்) லிமிடட்

நாட்டில் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். இதன் செயற்பாடுகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அன்டெ லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட்

இலங்கை மற்றும் ஏற்றுமதி சந்தையின் மின்சார மின்மானித் தேவையினை சமாளிப்பதற்காக எரிசக்தி மீற்றர் உற்பத்தி வசதியினை பேணுதல்.

தூரநோக்கும் நீண்டகால இலக்குகளும்

குழுமத்தின் தூரநோக்கு, இலட்சியம் மற்றும் விழுமியங்கள் என்பன இந் ஆண்டறிக்கையின் 2-3 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

பங்குதாரர்களின் தகவல்கள் மற்றும் பங்குரிமை வீதம்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் பங்குதாரர்களின் நிலைமை கீழுள்ளவாறாகும்.

பங்குதாரர் பெயர்	பங்குரிமை வீதம் %
இலங்கை மின்சார சபை	54.80%
பொதுத் திறைசேரி	43.60%
நகர அபிவிருத்தி அதிகாரசபை	0.80%
உள்ளூராட்சி அதிகாரசபைகள்	0.80%
	100%

பங்குதாரர்களை சமத்துவமாக நடாத்துதல்

பங்குதாரர்கள் அனைவரும் சமத்துவமாகவும் பக்கச்சார்பின்றியும் கவனிக்கப்படுகின்றமையினை பனிப்பாளர் சபை எப்போதும் உறுதிப்படுத்துகின்றது.

கம்பனியின் நிலைவரம் மீதான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை (தொடர்ச்சி...)

பணிப்பாளர் சபையும் அதன் உள்ளடக்கமும்

வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனி

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவிவகித்த கம்பனியின் பணிப்பாளர்களது பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திரு. எஸ்.ரீ. நாணயக்கார	- தலைவர் (2019.01.30 முதல் 2019.11.21 வரை)
திரு. டபிள்யூ.பி. கணேகல	- தலைவர் (2019.01.01 வரை)
திரு. ரக்ஹித ஜயவர்தன	- பணிப்பாளர் (2019.01.30 முதல் 2019.11.21 வரை)
திரு. என்.ஜே. வீரகோன்	- பணிப்பாளர் (2019.11.29 வரை)
திரு. கே.டீ.எம். சில்வா	- பணிப்பாளர் (2019.01.16 வரை)
திரு. எஸ்.டீ.டபிள்யூ. குணவர்தன	- பணிப்பாளர் (2019.01.30 முதல் 2019.11.25 வரை)
திரு. என்.ஜே. வீரகோன்	- பணிப்பாளர் (2019.01.30 முதல் 2019.11.29 வரை)
திரு. டபிள்யூ.பி. கனேகல	- பணிப்பாளர் (2019.01.01 வரை)
திரு. ஏ.கே. சமரசிங்ஹ	- பணிப்பாளர் (2019.0115 வரை)
திரு. வீ.எஸ். திக்வெல்ல	- பணிப்பாளர் (2019.02.21 வரை)

2020 சனவரி 01 முதல் தற்போதயை திகதி வரை கம்பனியினது பணிப்பாளர் சபை மாற்றங்கள்

திரு. வீ.எஸ். திக்வெல்ல	- பணிப்பாளர் (2020.06.11 வரை)
திரு. பீ. அல்கம	- பணிப்பாளர் (2020.06.16 வரை)
திரு. அன்டன் பெரேரா	- பணிப்பாளர் (2020.01.16 முதல் 2020.03.11 வரை)

தற்போதைய சபை உறுப்பினர்கள்

திரு. எம்.பீ.ஏ.பீ. த சில்வா	- பணிப்பாளர் (2020.01.17 முதல்)
திரு. எச்.எம்.வீ. ஹேரத்	- பணிப்பாளர் (2020.01.17 முதல்)
திரு. டீ.டீ.கே. குணரத்ன	- பணிப்பாளர் (2020.01.28 முதல்)
திரு. பீ. அல்கம	- பணிப்பாளர் (2020.03.11 முதல் மீள் நியமனம்)
திரு. என்.பீ.கே. ரணவீர	- பணிப்பாளர் (2020.02.12 முதல்)
திரு. ஜே.எஸ். விதானகே	- பணிப்பாளர் (2020.02.11 முதல்)
திரு. ஆர்.எம்.டீ. லக்ஸ்மன்	- பணிப்பாளர் (2020.06.11 முதல்)

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான துணைக்கம்பணிகளின் பணிப்பாளர்களது பெயர்கள்

அன்டெ லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவிவகித்த கம்பனியின் பணிப்பாளர்களது பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திரு. ரீ.என். நாணயக்கார	- தலைவர் (2019.12.02 வரை)
திரு. பி.எஸ்.ஜே. பெரேரா	- பணிப்பாளர் (2019.12.31 வரை)
திரு. எச்.என்.குணசேகர	- பணிப்பாளர் (2019.10.01 வரை)
திரு. லியூ ஜியான்வூ	
திரு. சென் டிகிங்	

கம்பனியின் நிலைவரம் மீதான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை (தொடர்ச்சி...)

தற்போதைய சபை உறுப்பினர்கள்

திரு. எம்.பீ.ஏ.பீ. த சில்வா - தலைவர் (2020.02.10 முதல்)
திரு. டீ.டீ.கே. கருணாரத்ன - பணிப்பாளர் (2020.02.10 முதல்)
திரு. லியூ ஜியான்வூ
திரு. சென் டிகிங்
கலாநிதி பி.எஸ். நரேந்திர தி சில்வா பணிப்பாளர் (2020.02.10 முதல்)

* திரு சென் டிங்யுங் அவர்கள் திரு லியு ஜியான்வு அவர்களிற்குப் பதில் பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார்.

லெகோ புரஜெக்ட் (பிரைவட்) லிமிடட்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிப்பாளர்களது பெயர்கள்

திரு. எஸ்.ரீ. நாணயக்கார - தலைவர் (2019.12.02 வரை)
திரு. எச்.என். குணசேகர - பணிப்பாளர் (2019.10.01 வரை)
திரு. எஸ்.எல். ஜெயசேகர -

தற்போதைய சபை உறுப்பினர்கள்

திரு. எம்.பீ.ஏ.பீ. த சில்வா - தலைவர் (2020.02.10 முதல்)
திரு. எஸ்.எல். ஜெயசேகர

பணிப்பாளர் ஊதியம்

பணிப்பாளர் ஊதியங்கள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 07 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆர்வவெளிப்படுத்தல் பதிவேடு

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டவாறு ஆர்வவெளிப்படுத்தல் பதிவேடொன்றை கம்பனியும் துணைக்கம்பனிகளும் பராமரிக்கின்றன.

பணிப்பாளர்களின் ஆர்வம்

மீளாய்வாண்டுக் காலப்பகுதியில் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கம்பனியுடன் ஒப்பந்தமொன்றில் அல்லது தொடர்புடைய தரப்புக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்படுதல் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 28 இல் தரப்பட்டுள்ளன.

பணிப்பாளர் கூட்டங்கள்

மீளாய்வாண்டு காலப்பகுதியில் 14 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் இடம்பெற்றதுடன் ஒரு தீர்மானம் பணிப்பாளர் சபையினால் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டது.

பங்குதாரர்களின் பங்குரிமைத்துவம்

பணிப்பாளர்களில் எவரும் கம்பனியில் அல்லது குழுமத்தில் பங்குரிமைத்துவம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர்கள் அவர்களின் உறவுமுறைத் தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 28 இல் வெளிப்படுத்தியுள்ளனர்.

கம்பனியின் நிலைவரம் மீதான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை (தொடர்ச்சி...)

நிதி மீளாய்வு

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக்கூற்றுக்க-ளிற்கான குறிப்பு 01 முதல் 03 வரை தரப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களிற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

வணிக விவகாரங்களது நிலையினை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்கள் ஆவர்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளுடன் இணக்கமான முறையில் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இத்தகைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கிறது என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

கம்பனியினதும் குழுமத்தினதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியினதும் குழுமத்தினதும் இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று என்பன முறையே கம்பனியினதும் குழுமத்தினதும் நிதி நிலைமையினையும் நிதிச் செயலாற்றலையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பதாக பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றனர்.

வருமானம்

குழுமத்தின் வருமானம் ரூபா 33.71 பில்லியனாகும். வித்தியாசமான பாவனையாளர் வகைப்படுத்தல் பங்களிப்பிற்கு அமைய இனங்காணப்பட்ட குழுமத்தின் விபரமான வருமானப் பகுப்பாய்வு நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 04 இல் தரப்பட்டுள்ளன. குழுமத்திலுள்ள கம்பனிகளிற்கு இடையிலான வியாபாரம் நியாயமான சந்தை விலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

செலவினம்

குழுமத்தின் மொத்த செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 4.91 பில்லியனிலிருந்து ரூபா 5.49 பில்லியனுக்கு அல்லது 12 சதவீதமாக அதிகரித்திருந்தது. தேறிய கணக்கீட்டு∴ தேறிய கூட்டப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து இ.மி.ச. பெறவேண்டியவைகளிற்கான ரூபா 548 மில்லியன் தொகையான மேலதிக ஐயக்கடன் ஏற்பாடு மற்றும் மேந்தலைக் கட்டணங்களின் அதிகரிப்பு என்பன இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

இலாபங்கள்

குழுமம் அதனது மொத்த இலாப எல்லையினை 16 சதவீதமாக பேணுகின்றது. வரிக்கு முந்திய இலாபம் ரூபா 4 பில்லியனாக 26 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதற்கான பிரதான காரணம் வெஸ்ட் கோஸ் பவர் (பிரைவட்) லிமிடட் இன் முதலீட்டிலிருந்து கிடைத்த பங்கிலாப அதிகரிப்பு மற்றும் என்டெ லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட் இன் வருமானம் மற்றும் மொத்த இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பாகும். இருப்பினும், நடப்பாண்டு வருமான வரி மற்றும் பிற்போட்ட வருமான வரி ஏற்பாடு காரணமாக வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் 7.2 சதவீதத்தால் குறைவடைந்து ரூபா 2.74 பில்லியனாக காணப்பட்டது.

வரியியல்

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு வரிச் சட்டம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருந்தங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வரி நோக்கத்திற்காக சீராக்கப்பட்ட கணக்கீட்டு இலாபத்தின் அடிப்படையில் வரிக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. செயற்பாட்டிலுள்ள அனைத்துக் கம்பனிகளும் 28 சதவீத வருமான வரியினைச் செலுத்துவதற்கு பொறுப்புடையனவாகும்.

கம்பனியின் நிலைவரம் மீதான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை (தொடர்ச்சி...)

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளிற்கு இடையிலான தற்காலிக வேறுபாடுகள் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்கான அவற்றின் முன்னொண்டுசெல் தொகைகள் தொடர்பாகவுள்ள பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி அறிக்கையிடல் திகதி வரை பிற்போட்ட வரிப் பொறுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

பங்கிலாபம்

ஆண்டின் போதான மொத்த பங்கிலாபக் கொடுப்பனவு ரூபா 1.15 பில்லியனாகும்.

பங்கொன்றுக்கான உழைப்பு

அடிப்படை பங்கொன்றுக்கான உழைப்பு ஆண்டிற்கான தேறிய இலாபத்தை ஆண்டின் இறுதியில் கம்பனியின் பங்குதாரர்களின் கைவசமுள்ள நிறையளித்த பங்குகளின் எண்ணிக்கையினால் வகுத்து கணிப்பிடப்படுகின்றது. தயவுசெய்து நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 9 இனைப் பார்க்கவும்.

கூறப்பட்ட மூலதனம்

தயவுசெய்து நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 21.1 இனைப் பார்க்கவும்.

ஒதுக்கங்கள்

ஒதுக்கங்கள் மற்றும் மொத்த உரிமைத்துவத்தின் பொழிப்பு பின்வருமாறாகும்.

ரூபா 000	கூறப்பட்ட மூலதனம்	வருமான ஒதுக்கங்கள்	மீள்மதிப்பீட்டு மிகை	நியாயப் பெறுமதி ஒதுக்கம்	நிறுத்தி வைத்த உழைப்பு	கட்டுப்பாடற்ற வட்டி	மொத்த உரிமைத்துவம்
குழுமம்	1,145,067	340,642	1,854,817	8,752,517	21,725,353	150,631	33,969,027
கம்பனி	1,145,067	340,642	1,784,965	8,752,517	21,513,410	-	33,536,601

கடன்கள்

குறிப்பு 22 இல் காட்டப்பட்டுள்ள குத்தகைப் பொறுப்பு - ரூபா 141.6 மில்லியன் தொகையான வட்டிக் கடன் பெறுகையினைத் தவிர்த்து, கம்பனிக்கு அல்லது குழுமத்திற்கு எந்தவொரு நீண்டகாலக் கடன் பொறுப்பும் இல்லை.

2019 சனவரி 01 முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் எஸ்எல்எவ்ஆர்எஸ் 16 □ குத்தகைகள் இன் படி, யூஎஸ்டொலர் 5,000 இற்கு அதிகமான அனைத்து ஒப்பந்தங்களும் நீண்ட காலக் குத்தகைகளாக கருதப்பட்டு அதற்கேற்ப கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். எனவே, 20 காணிகள் மற்றும் கட்டிட வளவுகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய வாடகை உடன்படிக்கைகள் குத்தகைகளாகக் கருதப்பட்டு புதிய எஸ்எல்எவ்ஆர்எஸ் 16 இன் படி கணக்கீட்டுப் பரிகாரங்கள் செய்யப்பட்டன.

இந்த வட்டி தாங்கும் கடன் என்பது காணி மற்றும் கட்டிட வாடகைக் கொடுப்பனவுகளிற்கான எதிர்கால காசுப் பாய்ச்சல் கடப்பாட்டினைக் காண்பிப்பதற்காக வெளியிடப்பட்ட ஒரு கற்பனை மாதிரியாகும். மாதாந்த.'. அரையாண்டு.'. வருடாந்தம் வாடகை செலுத்துவதனைத் தவிர வேறு எந்த காசுப் பாய்ச்சலும் இல்லை.

ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

முன்னைய ஆண்டின் ரூபா 13.17 பில்லியன் உடன் ஒப்பிடுகையில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குழுமத்தின் ஒன்றித்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன ரூபா 13.62 பில்லியன் தொகையாகும். கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூபா 12.87 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 13.28 ஆகக் காணப்பட்டது.

கம்பனியின் நிலைவரம் மீதான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை (தொடர்ச்சி...)

நடைமுறைச் சொத்துக்கள்

முன்னைய ஆண்டின் ரூபா 19.17 பில்லியன் உடன் ஒப்பிடுகையில் 2019 இன் இறுதியிலான குழுமத்தின் மொத்த நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 21.94 பில்லியன் தொகையாகும். கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூபா 18.75 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 21.28 பில்லியன் ஆகக் காணப்பட்டது. குறுங்கால முதலீடுகள் அதிகரித்தமையே இதற்கான காரணமாக அமைந்திருந்தது.

நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்கும் கம்பனியின் ஊழியர்களிற்குமான அனைத்து நியதிச்சட்டக் கடப்பாடுகளும் ஒன்றில் முழுமையாகச் செலுத்தப்பட்டு அல்லது நிதிக்கூற்றுக்களின் தேவையான அளவிற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவிற்கு எட்டியவரையில் திருப்தியடைகின்றனர்.

ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்வுகள்

நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்குத் தேவையான எந்தவொரு பொருண்மையான நிகழத்தக்க பொறுப்பும் காணப்படவில்லை.

ஏனைய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்

இலங்கையில் பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு முரணான எந்தவொரு செயற்பாடுகளிலும் குழுமம் ஈடுபட்டிருக்கவில்லை என பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவுக்கு எட்டியவரை நம்புகின்றனர்.

தீர்வுகாணப்படாத வழக்குகள்

கம்பனிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகள் நிதிக்கூற்றுக்களிற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என்பதாக பணிப்பாளர்கள் கருதுகின்றனர். நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகளுடன் தொடர்புடைய நிகழத்தக்கவைகளும் கடப்பாடுகளும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் 26 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்ந்தியங்குதல்

தொடர்ந்தியங்குதல் எண்ணக்கருவின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இடர் முகாமைத்துவம்

குழுமத்தினதும் கம்பனியினதும் கூட்டிணைந்த குறிக்கோள்கள் அடையப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர்கள் அவற்றின் இடர் முகாமைத்துவத்தினை தொடர்ச்சியாக மீளாய்வு செய்துள்ளனர். தயவுசெய்து நிதிசார் இடர் முகாமைத்துவக் குறிப்பு 29 இனைப் பார்வையிடவும்.

கணக்காய்வாளர்

கம்பனியினது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இக்கணக்காய்வை மேற்கொள்கையில் நுசளெவ ரூ லுழரபெ எனும் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உதவப்பட்டது.

கம்பனியின் நிலைவரம் மீதான பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை (தொடர்ச்சி...)

கம்பனி	கணக்காய்வாளரின் பெயர்	கொடுப்பனவு வகை	தொகை (ரூபா)
வரை. லங்கா மின்சார (தனியார்) கம்பனி	கணக்காய்வாளர் தலைமை அதிபதி Ernst & Young பட்டயக் கணக்காளர்களால் உதவப்பட்டது.	சேவைக் கட்டணம் கணக்காய்வுக் கட்டணம்	375,000/- 2,500,000/- (VAT நீங்கலாக)
அன்டெ லெகோ மீற்றறிங் (பிரைவட்) லிமிடட்	கணக்காய்வாளர் தலைமை அதிபதி Ernst & Young பட்டயக் கணக்காளர்களால் உதவப்பட்டது.	சேவைக் கட்டணம் கணக்காய்வுக் கட்டணம்	45,000/- 300,000/- (VAT நீங்கலாக)
லெகோ புரஜெக்ட் (பிரைவட்) லிமிடட்	கணக்காய்வாளர் தலைமை அதிபதி Ernst & Young பட்டயக் கணக்காளர்களால் உதவப்பட்டது.	சேவைக் கட்டணம் கணக்காய்வுக் கட்டணம்	- 120,000/- (NBT மற்றும் VAT வரி நீங்கலாக)

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட 19 ஆவது திருத்தத்திற்கு அமைய அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி எதிர்வரும் ஆண்டுகளிற்காக கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலிற்கு தீங்குவிளைவிக்கும் எந்தவொரு செயற்பாட்டிலும் கம்பனி ஈடுபட்டிருக்கவில்லை.

தொழில் கொள்கைகள்

மிகப் பொருத்தமான ஆட்களை ஆட்சேர்ப்புச் செய்தல் என்பதனை குழுமம் தொழில் கொள்கையாகக் கொண்டுள்ளதுடன் அவர்களின் திறன்களையும் தகைமைகளையும் முன்னேற்றுவதற்கு தேவையான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன், பால், இன, மத பாகுபாடின்றி அனைவருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. ஊழியர்களின் சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. ஆண்டின் இறுதியிலுள்ளவாறு கம்பனி மற்றும் துணைக் கம்பனிகளில் காணப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1535 ஆகும்.

வருடாந்த பொதுக் கூட்டம்

வழமையான வணிகச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கத்துடன் இல. 411, காலி வீதி, கொழும்பு 03, ஈ.எச். கூரே கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் அமைந்துள்ள கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் 2020 ஒக்தோபர் 22 ஆந் திகதி மாலை 3.30 மணிக்கு 36 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

பணிப்பாளர் சபையின் சார்பாக வருடாந்த அறிக்கையில் தலைவர் மற்றும் பணிப்பாளரால் கையொப்பமிடப்படுகின்றது.

தலைவர்

பணிப்பாளர்

பி.டபிள்யூ. கோர்பெரேட் செக்ரெடெரியல் (பிரைவட்) லிமிடட்,
செயலாளர்
2020 செப்தெம்பர் 10
கொழும்பு.

பொறியியல் பிரிவு

2019 ஆம் ஆண்டு பொறியியல் பிரிவிற்கு ஒரு பயனுள்ள ஆண்டாக அமைந்திருந்தது எனக் கருதலாம். மின்சார விநியோகத் துறையில் விரைவாக மாற்றமடைந்து வருகின்ற, சவால் மிக்க இந்த வேளையில், தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வருகின்ற வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காக பொறியியல் பிரிவானது அதன் வலைப்பின்னல் திட்டமிடலும் அபிவிருத்தியும், கம்பனியின் தகவல் தொழில்நுட்ப முறைமையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பதவியணியினரின் தொழில்நுட்ப ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சிகள் என்ற மூன்று கோணங்களில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இந்த இலட்சியத்திற்கு ஏற்ப, பொறியியல் பிரிவின் கீழ் இயங்குகின்ற அனைத்துத் திணைக்களங்களும் அதாவது முறைமை திட்டமிடல் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், ஒழுங்கமைப்புத் திணைக்களம், செயற்திட்டங்கள் திணைக்களம் மற்றும் முறைமை அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்ற உப திணைக்களங்களான தகவல் தொழில்நுட்பம், வழங்கல்கள், பரிசோதனை ஆய்வுகூடம் மற்றும் பயிற்சி நிலையம் என்பன ஆண்டு முழுவதும் இந்த செயன்முன்னேற்றத்தை அடைவதற்கு அயராது உழைத்தன.

முப்பது ஆண்டுகளிற்கு முன்னர் அரை நகர்ப்புற பிரதேசங்களுக்காக வடிவமைக்கப்பட்ட தற்போதைய வலைப்பின்னல் கட்டமைப்பில் கம்பனி பல்வேறுபட்ட திறன் மற்றும் நம்பகத்தன்மை சிக்கல்களை எதிர்கொண்டது. எனவே, நடைமுறையில் எதிர்நோக்கியுள்ள சிக்கல்களிற்கு நிலையான தீர்வுகளைக் காண்பதற்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ஏடிபி) உதவியுடன் கம்பனி ஆய்வொன்றை ஆரம்பித்தது. அந்த ஆய்வின் மூலம் கம்பனியின் வலைப்பின்னல் கட்டமைப்பை 33kV மற்றும் 11kV மின்னழுத்த அளவுகள் கொண்ட வலைப்பின்னலாக மாற்றியமைத்தல் வேண்டுமென தெரியவந்தது. அதற்கேற்ப திட்டமிடல் அளவுகோல்களை திருத்தியமைக்கும் வேலை முறைமை அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. கலப்பு மின்னழுத்த முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதிக வீரியம் கொண்ட ஸ்பொட் அழுத்திகளை 33kV வலைப்பின்னலுக்கு மாற்றியமைக்கும் ஆற்றலைப் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இடைநிலை முதன்மை உபமின் நிலையங்களிற்கான கிரயத்தை தவிர்ப்பதற்காக 132/33kV உப மின் நிலையங்கள் அல்லது அதிக நம்பகரமான 33kV உப மின் நிலையங்களிலிருந்து எதிர்கால மின் இயலளவைபெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், தற்போதைய தலைக்கு மேலாகவுள்ள வலைப்பின்னலை நிலக்கீழ் கேபிள்களுடன் கூடிய வலைப்பின்னலாகவும் அதிக நம்பரமான ஏரியல் பண்டல் கேபிள்களாகவும் மாற்றுவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட இந்த திட்டமிடல் அளவுகோலின் அடிப்படையிலமைந்த 2019 – 2028 ஆம் காலப்பகுதிக்கான திட்டமிடல் அடித்தளத்திற்கான தனது முதல் நடுத்தர மின்னழுத்த அபிவிருத்தித் திட்டத்தை கம்பனி வெளியிட்டது.

கடந்த காலங்களில் குறைவடைந்திருந்த வலைப்பின்னல் நம்பகத்தன்மை காரணமாக, முக்கியமாக அதிகரித்துள்ள நகர்ப்புற செயற்பாட்டு மட்டங்கள் மற்றும் கடந்த பல தசாப்தங்களிற்கு மேலாக காணப்பட்ட முதலீட்டுப் பற்றாக்குறை என்பனவற்றால் தலைக்கு மேலாகவுள்ள மின்சார விநியோக வலைப்பின்னல் பிரதானமாக பாதிக்கப்பட்டுள்ளது எனக் கூறலாம். ஆகையால், களனிய, கோட்டே, நுகேகொட, மொரட்டுவ மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களிற்கு ஓர் வலைப்பின்னல் நவீனப்படுத்தல் செயற்திட்டத்தை முறைமை அபிவிருத்தித் திணைக்களம் பிரேரித்தது. கம்பனியின் இயலளவு முன்னேற்றம் மற்றும் நம்பகத்தன்மைத் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதில் முறைமை அபிவிருத்தித் திணைக்களமானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்திட்ட தயாரித்தல் மற்றும் தொழில்நுட்ப மதியுரைஞர்களுடன் இணைந்து இச்செயற்திட்ட வேலைகளை 2019 இல் மேற்கொண்டிருந்தது. இதன் மூலம் கம்பனியில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்துவதற்கு 2021 இல் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த செயற்திட்டத்தை மேலும் பலப்படுத்துவதன் மூலம், களனிய பகுதியில் முன்மொழியப்பட்டுள்ள உபமின் நிலைய அபிவிருத்திக்கு உதவியாக தலுகம பகுதியில் 132/33kV உப மின் நிலையத்திற்கு நிதி வழங்குவதற்கு ஏடிபி இணங்கியுள்ளது. இது கம்பனியின் விநியோக வலைப்பின்னலுக்கு முதலாவது நேரடி உப மின்நிலைய இயலளவாக காணப்படும். மேலும், இந்த சேர்த்தல் காரணமாக, இந்தப் பகுதியிலுள்ளோர் பெருமளவு நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. முறைமை அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒரு விரிவான உப மின்நிலைய நம்பகத்தன்மை ஆய்வை மேற்கொள்ள முடிந்திருந்தது. மேலும் இச்செயற்திட்டம் பொருளாதார ரீதியாக சாத்தியமானது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

முறைமை அபிவிருத்தித் திணைக்களம் அதன் வழமையான கொள்வனவுகள் மற்றும் முறைமை அபிவிருத்திப் பணிகளை ஆண்டின் ஆரம்பத்தில் கிரயக் கையேடு மற்றும் ஏனைய திட்டமிடல் ஆவணங்களை வெளியிடுவதன் மூலம்

பொறியியல் பிரிவு (தொடர்ச்சி...)

மேற்கொண்டதுடன் மொத்தமாக ரூபா 1 பில்லியன் கிரயத்தில் 217 கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

ஜிஎஸ்எம் சங்கத்தின் நிதி உதவியுடனும் டயலொக் ஆக்ஸியாட்டா பீஎல்சீ மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவியுடனும் கோட்டே பசுமை வலயப் பிரதேசத்தில் ஸ்மார்ட் மின்மானி வாசித்தல் பரீட்சார்த்த செயற்திட்டத்தை முறைமைகள் அபிவிருத்தித் திணைக்களம் வெற்றிகரமாக பூரணப்படுத்தியது. இச்செயற்திட்டம் 3,200 பொருத்திய ஸ்மார்ட் மின்மானிகள், இலங்கையில் முதன்முறையாக நுகர்வோருக்கான முற்செலுத்திய மின்சார வசதி மற்றும் 2020 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படவுள்ள விநியோக சேவைகள் ஒழுங்கமைத்தல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விநியோக வோல்டேஜ் கண்காணிப்புத் தேவைப்பாடுகளிற்காக வடிவமைக்கப்பட்ட 150 வலைப்பின்னல் கண்காணிப்புச் சாதனங்களுடன் கூடிய அதிநவீன ஐஓடி அடிப்படையிலான ஸ்மார்ட் மின்மானி முறைமையைச் வலைப்பின்னலுக்கு உட்சேர்த்தது.

தகவல் முறைமையினையும் முகாமைத்துவ முறைமையினையும் அமுல்படுத்தியதன் மூலம் கம்பனியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் 2019 ஆம் ஆண்டை ஓர் உற்பத்தித்திறன் மிக்க ஆண்டாக காண்பித்தது. இந்த அமுல்படுத்தல் ஐஎஸ்ஓ 27000 வழிகாட்டல்களிற்கு அமைய அனைத்து தகவல் தொழில்நுட்பக் கொள்கை ஆவணங்களையும் நடைமுறை வழிகாட்டல்களையும் உருவாக்கியுள்ளது. அமுல்படுத்தல் மதியுரைஞர்களால் இணங்காணப்பட்ட சகல பரிந்துரைகளையும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தால் பூரணப்படுத்த முடிந்திருந்தது. கம்பனியுடன் அதன் நுகர்வோருக்கு தொடர்புகொள்வதற்கு மிகவும் பயனுள்ள கருவியாகக் கருதப்படுகின்ற “மைலெகோ” கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் அறிமுகப்படுத்தியது. இந்தப் பயன்பாட்டின் மூலம், கம்பனியின் வாடிக்கையாளர்கள் விசாரணைகள் அல்லது மின்தடை முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் மின் கட்டண செலுத்துதல் மற்றும் கட்டண வரலாறு குறித்த தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் மின்தடை அறிவித்தல்கள் மற்றும் பதில்களைப் பெற்றுக்கொள்வதற்கும் செயலிழந்த வாகனங்களை திறம்பட ஒதுக்குவதற்கும் தகவ் தொழில்நுட்பத் திணைக்களம் மின்சாரத் தடை எப் ஒன்றையும் செயலிழந்த வாகன கண்காணிப்பு முறைமையினையும் அறிமுகப்படுத்தியது.

முறைமை அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற கம்பனியின் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் 1223 பதவியணியினருக்கு 55 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டிருந்தது. இது மொத்தம் 80 சதவீத பதவியணியினர் ஒரு முறையாவது இந்த நிலையத்தில் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டமையினை உறுதிசெய்கின்றது. அவர்கள் 2019 இன் உள்ளக பயிற்சி திட்டத்தின் 100 சதவீத இலக்கினை அடைந்திருந்தனர்.

கம்பனியின் பரிசோதனைத் திணைக்களம் வழமைபோலவே, கம்பனியின் வருமானத்திற்கு ஏறத்தாழ 40 சதவீத பங்களிப்பை வழங்குகின்ற 1945 மொத்தக் கொள்வனவு வாடிக்கையாளர்களையும் உள்ளடக்கி அதன் 2019 ஆம் ஆண்டிற்கான பரிசோதனைச் சுழற்சியினை வெற்றிகரமாக பூரணப்படுத்தியது. அவர்கள் 2019 இன் செயலாற்றல் திட்டத்திலுள்ள 100 சதவீத இலக்கினை அடைந்திருந்தனர்.

ஒழுங்குபடுத்தல் திணைக்களமானது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் நெறிப்படுத்தப்பட்டவாறு மின்சார விநியோக செயலாற்றல் நியமங்களை தற்போது அமுல்படுத்துகின்றது. ஆரம்ப கட்டம் தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், தற்போது தழுவல் கட்டத்தில் காணப்படுகின்றது. அத்துடன், நுகர்வோர் அனுபவத் தரத்தினை முன்னேற்றி தற்போதைய திருப்தி மட்டம் மற்றும் எதிர்கால வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்கள் பற்றிய துல்லியமான அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கிய விதத்தில் வாடிக்கையாளர் திருப்தி ஆய்வொன்றை ஒழுங்குபடுத்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. மேலும், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் கோரப்பட்ட அனைத்துத் தரவுகளும் உரிய வேளையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஒழுங்குபடுத்தல் தகவல் முறையினை (ஆர்ஐஎஸ்) வெளியிடும் வேலைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

செயற்திட்டத் திணைக்களமானது விநியோக வலைப்பின்னல் புனரமைத்தல்களில் அதன் திட்டங்களிற்கும் மேலாக செயலாற்றியுள்ளதுடன் கம்பனியின் ஏழு கிளைகளிலும் ரூபா 508 மில்லியனுக்கும் மேற்பட்ட செயற்திட்டங்களையும் ரூபா 274 இற்கு மேற்பட்ட விநியோக அபிவிருத்திச் செயற்திட்டங்களையும் ஆரம்பித்துள்ளது.

வலைப்பின்னல் தன்னியக்கப்படுத்தல்

ஸ்மார்ட் மின்மானி முறைமை

ஜிஜஎஸ் இயங்குதளம் (புவியியல் தகவல் முறைமை)

வலைப்பின்னல் டிஜிட்டல் மயமாக்கல்

வலைப்பின்னல் டிஜிட்டல் மயமாக்கலை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஒரு உற்பத்தி நிறுவனமாக லெகோ அதனது உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான சிறந்த ஆற்றலைக் கொண்டுள்ளது. இன்று எங்கள் நிறுவனத்தில் வணிக நடவடிக்கைகளை இயங்கும் போது இது சிறந்த செயல்திறன், துல்லியம் மற்றும் தெளிவுக்கு வழிவகுக்கும். இது தொடர்பிலான, வலைப்பின்னல் டிஜிட்டல் மயமாக்கலுக்கான எங்கள் உத்திகள் எங்கள் வணிக மாதிரியை விரிவாகப் பார்ப்பதோடு, எங்கள் சொந்த அன்றாட நடவடிக்கைகளின் அனுபவங்களை மேம்படுத்தி, எங்கள் வணிகத்திலும் எங்கள் ஆர்வமுள்ள தரப்பினர்களிடமும் சாதகமான தாக்கத்தை உருவாக்கத் தொடங்குகின்றன. லெகோவில் வலைப்பின்னல் டிஜிட்டல் மயமாக்கலின் அடிப்படையில் நாம் எடுக்க விரும்பும் சில முக்கிய படிமுறைகள் பின்வருமாறு.

முக்கியமாக வலைப்பின்னல் டிஜிட்டல் மயமாக்கல் நிலைத்திருக்கவும் மேலோங்கவும் செயற்பாட்டு மற்றும் நம்பகரமான வலைப்பின்னல் தன்னியக்கம் காணப்படுதல் வேண்டும். அது உண்மையாக இருக்க தற்போதைய வலைப்பின்னல் உள்கட்டமைப்பில் சில அடிப்படை நிலை மாற்றங்கள் நடைபெற வேண்டும். இதை கருத்தில் கொண்டு, தொலைதூரத்தில் இயக்கக்கூடிய தானியங்கு சுவிட்சுகள், மின்மானிகள் மற்றும் கட்டுப்படுத்திகளுடன் எங்கள் வலைப்பின்னலை வலுபப்டுத்த எதிர்பார்க்கின்றோம். மேலும், எங்கள் வலைப்பின்னல் தன்னியக்கத் தளத்துடன் திறமையான மற்றும் நம்பகரமான ஒருங்கிணைப்பை உருவாக்க முடியும்.

ஒரு பயன்பாட்டு சேவை நிறுவனம் என்ற வகையில் எல்லா நேரங்களிலும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற மற்றும் திறமையான சேவையை வழங்குவதே எங்கள் பிரதான குறிக்கோளாக உள்ளது. மின்சார விநியோகத்தை பழுதுபார்க்கும் நேரத்தை குறைந்த பட்சமாக வைத்திருப்பது இதில் அடங்கும். எங்கள் சேவை போட்டித்தன்மையுடனும் திருப்திகரமாகவும் இருக்க எங்கள் தொழில்நுட்ப உதவியினை விடாமுயற்சியுடன் வழங்க முடியும். இதனால் எங்கள் வாடிக்கையாளர்களின் அன்றாட வாழ்க்கைச் சுற்றோட்டம் சிரமத்திற்கு ஆளாகாது. அந்த வகையில் எங்கள் வலைப்பின்னலின் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தி தானியங்கி மாறுதல் வழிமுறைகளை செயல்படுத்த உத்தேசித்துள்ளோம். தொழில்நுட்பக் கோளாறு அல்லது தவறுகள் ஏற்படும் போதெல்லாம் வலைப்பின்னல் தன்னியக்கத்தின் தவறு இடம்பெறும் இடங்களை அடையாளம் காண இது நம்மை அனுமதிக்கிறது. இந்த புதிய முறையின் மூலம் வலைப்பின்னல் தன்னியக்கத்தின் பிற பகுதிகளுக்கு இடையூறு விளைவிக்காமல் தவறு ஏற்பட்ட இடத்தை தனிமைப்படுத்த முடியும்.

நாம் நடைமுறைப்படுத்துவதற்கு கவனம் செலுத்துகின்ற ஸ்மார்ட் மீட்டரிங் எண்ணக்கரு வெற்றிபெற பல காரணங்கள் உள்ளன. இது ஒரு வசதியான மற்றும் துல்லியமான கணனி கண்காணிப்பு மற்றும் வாடிக்கையாளர் பட்டியலிடல் முறைகளை உருவாக்கும் திறன் கொண்டது. அத்துடன் பராம்பரிய வழிகளைப் போலல்லாமல், எங்கள் வாடிக்கையாளர்களின் பாவனை நடத்தை மற்றும் அதற்கான தகவல்களை உண்மையான நேரத்தில் தொடர்பு கொள்வதற்கு இது நம்மை அனுமதிக்கிறது. நாங்கள் தற்போது பெரும்பாலான மீட்டர்களை ஸ்மார்ட் மீட்டர்களாக மாற்றுகின்றோம்.

டிஜிட்டல் அடிப்படையானது, ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி அடிப்படையினை பயன்படுத்துவதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் பயன்பாடு தொடர்பான தகவல்களை விரைவாகவும் எளிதாகவும் அணுக அனுமதிப்பதாகும். ஸ்மார்ட் மீட்டரிங் முறையின் இந்த புதிய அறிமுகம் வாடிக்கையாளர்களுக்கும், ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு செல்லும் பாரம்பரிய மின்மானிகளை வாசிக்கும் லெகோ ஊழியர்களுக்கும் அவர்களின் நேரத்தையும் முயற்சியையும் மிச்சப்படுத்துவதாக உள்ளது.

நடைமுறை டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் மூலம் நிலையான வணிகச் சூழலை உருவாக்குவதற்கான புதிய வழிகளை நாங்கள் தொடர்ந்து தேடுகின்றோம். ஒரு பயன்பாட்டு நிறுவனமாக நிலைத்திருத்தல் தன்மையைப் பற்றி பேசும்போது, எரிசக்தி வீணடிக்கப்படுவதற்கான தீர்வுகளைக் கண்டுபிடிப்பதற்காக டிஜிட்டல் மயமாக்கல் மூலம் புதிய முறைகளை உருவாக்குவது நமது கடமையாகும். மேலும் முக்கியமாக அதை நீண்ட காலத்திற்கு பாதுகாப்பது குறிப்பாக தெரு விளக்குகள், அவை தற்போது எவ்வாறு இயங்குகின்றன என்பதைப் பார்க்கும்போது திறமையின்மையைக் கொண்டுள்ளன. அவை டிஜிட்டல் மயமாக்கல் நுட்பங்களை முறையாக செயல்படுத்துவதன் மூலம் தடுக்கலாம். தற்போதைய தெரு விளக்கு தொடர்பான குறைபாடுகளுக்கு தீர்வுகள் வழங்கக்கூடிய தானியங்கி தெரு விளக்கு கட்டுப்பாட்டு முறைமை போன்ற புதிய தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட முறையை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கின்றோம். தானியங்கி தெரு விளக்கு கட்டுப்பாட்டு அமைப்பு பகல் நேரத்தின் தீவிரத்தை உணரும்போது தானாகவே இயங்குகின்றது. எந்தவொரு மனித மேற்பார்வையும் இல்லாமல், தெரு விளக்குகள் தேவைப்படும் போது மட்டுமே செயல்பட இது அனுமதிக்கின்றது.

லெகோ இல் டிஜிட்டல் மயமாக்கலின் மற்றொரு நேர்விளைவு என்னவென்றால், ஒருங்கிணைந்த முறைமைகள் பல பயனுள்ள வழிகளில் தரவுகளைப் பெறவும், கணக்கிடவும் மற்றும் பகுப்பாய்வு செய்யவும் உதவும். இது வலைப்பின்னலின் மேம்பட்ட பகுப்பாய்வை உருவாக்க உதவுகின்றது. மற்றும் எதிர்கால எரிசக்தி வழங்கல் மற்றும் தேவையை முன்னறிவிக்கிறது. இந்த தரவு மேகக்கணி சார்ந்த தரவு முகாமைத்துவத் தளத்தில் நிகழ்நேரத்தில் சேமிக்கப்பட்டு புதுப்பிக்கப்படும் என்பதும் சிறப்பம்சமாகும். இது தரவு சேமிப்பு மற்றும் பகுப்பாய்வு தொடர்பான எங்கள் செலவுகளை வெகுவாகக் குறைக்கும். மேலும், இது விரைவான மற்றம் நம்பகரமாக தரவு அணுகல் மற்றும் செயலாக்க நேரத்தை குறைப்பதற்கு உதவுகின்றது.

செயற்பாடுகள் பிரிவு

செயற்பாட்டுப் பிரிவு 2019 ஆம் ஆண்டில் கம்பனியின் கூட்டிணைந்த குறிக்கோள்களை அடைந்து, அதன் 568,393 வாடிக்கையாளர்களிற்கு வினைத்திறனான சேவையினை வழங்கியது. பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அமுல்படுத்தியிருந்த மின்சார ஒழுங்குமுறை நியமங்களுடன் இணங்கியொழுகி அதன் வாடிக்கையாளர்களிற்கு 1679 ஜிகாவொட் மின்சாரத்தை வழங்கியது. 3.98 சதவீத மின்சார இழப்புடன் வேண்டப்பட்ட நியமங்களில் வழங்கல் தரத்தினை பராமரித்து 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் விநியோக வலைப்பின்னல் தளத்தில் 1.7 சதவீத வாடிக்கையாளர் அதிகரிப்பை கம்பனி பெற்றுக்கொண்டது. அதேவேளை, களனிய கிளையில் அறிவிக்கப்பட்டிருந்த அசாதாரண குறைவான இழப்பை இனங்காண்பதற்கான செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்டதுடன் குறைவான இழப்புடன் கூடிய பரப்புகள் இனங்காணப்பட்டன.

கட்டண வகைக்கேற்ப கம்பனியின் வாடிக்கையாளர்களின் வருடாந்த நுகர்வு கீழேயுள்ள அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

கட்டணம்	வாடிக்கையாளர் எண்ணிக்கை	வருடாந்த நுகர்வு (kWh)	வருடாந்த நுகர்வு (MWh)
வீட்டுப் பாவனையாளர்	472,715	631,586,701	646,824
பொது நோக்கம் மற்றும் அரசாங்கம்	87,100	554,534,071	644,172
கைத்தொழில் மற்றும் ஹோட்டேல்	3,138	352,822,584	354,580
மதவழிபாட்டுத் தளங்கள்	2,614	10,927,632	11,652
வீதி விளக்குகள்	2,826	22,438,418	22,704
மொத்தம்	568,393	1,572,309,406	1,679,932



செயற்பாடுகள் பிரிவு (தொடர்ச்சி...)

கம்பனி பராமரிக்கின்ற விநியோக முறைமைச் சொத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

சொத்து வகை	அலகு	நீளம்/எண்ணிக்கை
11kV HV OH	km	1017
11kV HV UG	km	70
LV ABC வழிகள்	km	4404
உபமின் நிலையங்கள்	எண்ணிக்கை	2460
ஆளிகள்	எண்ணிக்கை	1844
தன்னியக்க முடுக்கிகள்	எண்ணிக்கை	18

வழங்கல் நம்பகத்தன்மை

வழங்கல் நம்பகத் தன்மையினை கம்பனி பிரதானமாக கருத்திற்கொள்கின்றது. 2019 ஆம் ஆண்டில் பொருத்தப்பட்ட 27 தன்னியக்க செயற்பாடுடைய லோட் பிரேக் ஆளிகள் வழங்கல் நம்பகத் தன்மையினை முன்னேற்றுவதற்கு பங்களித்திருந்தன. கம்பனியில் நம்பகத் தன்மைமிக்க பாதுகாப்பான விநியோக முறைமையினை பேணுவதற்கு விநியோகக் கட்டுப்பாட்டு நிலையம் அனைத்து வலைப்பின்னல் செயற்பாடுகளையும் கண்காணித்து பணிகளை மேற்கொள்கின்றது. 2019 ஆம் ஆண்டில் பூச்சிய விபத்துக்களைப் பேணுவதற்கு இதன் மூலம் செயற்பாட்டுப் பிரிவிற்கு முடிந்திருந்தது.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிட்டு நம்பகத்தன்மைக் குறிகாட்டிகள் கீழே தரப்பட்டுள்ளன.

வகை	SAIDI மணி/வாடிக்கையாளர்					
	2014	2015	2016	2017	2018	2019
LV தடங்கல்கள்	0.28	0.31	0.47	0.5	0.38	0.37
11kV LECO திட்டமிடப்பட்ட	15.86	13.34	18.56	21.14	17.5	17.55
11kV LECO தடங்கல்கள்	5.96	6.98	15.18	20.15	21.13	21.70
11kV CEB திட்டமிடப்பட்ட	7.07	6.81	5.12	5.85	6.97	4.40
11kV CEB தடங்கல்கள்	1.75	1.67	2.26	1.35	1.69	1.44
33kV திட்டமிடப்பட்ட	12.33	8.57	11.2	10.43	12.52	9.32
33kV தடங்கல்கள்	16.14	12.71	14.37	10.44	10.19	8.22

செயற்பாடுகள் பிரிவு (தொடர்ச்சி...)



வாடிக்கையாளர் சேவை

2019 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற சேவை உத்தரவாதங்கள்

சேவை உத்தரவாதம்	% அடைவு
10 வேலை நாட்களிற்குள் வழங்கப்பட்ட மதிப்பீடுகள்	87
கட்டணம் செலுத்திய பின்னர் 10 வேலை நாட்களிற்குள் வழங்கப்பட்ட புதிய இணைப்புக்கள்	89
30±3 நாட்களிற்கான பட்டியலிடல் வினைத்திறன்	98

பட்டியலிடல் வினைத்திறனை மேம்படுத்துவதற்காகவும் ஸ்மார்ட் மின்மானி வசதியினை பாவனையாளர்கள் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிப்பதற்காகவும் இலங்கையின் மின்வழங்கல் முறையினை ஸ்மார்ட் மின்வழங்கல் முறையாக மாற்றுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய, மூவாயிரம் ஸ்மார்ட் மின்மானிகள் 2019 ஆம் ஆண்டில் கோட்டே பிரதேசத்தில் பொருத்தப்பட்டன. மேலும், இந்த முன்னேற்றமிக்க பட்டியலிடல் முறையின் மூலம் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளிற்கமைய, மின்மானிகளை தன்னியக்க முறையில் வாசித்து மென் பட்டியலை வழங்குதல் போன்ற வசதிகள் காணப்படுகின்றன.

ஸ்ரீ லங்கா டெலிகொம் உடன் இணைந்து தாபிக்கப்பட்ட தொலைபேசி அழைப்பு நிலையத்தின் வசதிகள் மூன்று முகவர்கள் நியமிக்கப்பட்டு மும்மொழிகளிலும் தொடர்பாடல் செய்யக்கூடிய வசதியுடன் இந்த ஆண்டில் மேலும் விருத்தி செய்யப்பட்டன. இது கம்பனியிலுள்ள அழைப்பு நிலையத்தின் பிரதான அடைவாகும். இது அழைப்பு நிலையத்தின் சேவையின் தரத்தினை முன்னேற்றியதுடன் மாதமொன்றிற்கான பாவனையாளர் தொடர்புகளை ஏறத்தாழ 20,000 ஆயிரத்தினால் அதிகரித்திருந்தது.

செயற்பாடுகள் பிரிவு (தொடர்ச்சி...)

கம்பனியில் பாவனையாளர் சேவை வழங்கல் சுற்றாடலை அபிவிருத்தி செய்யும் வகையில், பாவனையாளர் சேவை வழங்கல் நிலையத்திற்கான நான்கு புதிய கட்டிடங்கள் பூரணப்படுத்தப்பட்டு 2019 ஆம் ஆண்டில் திறந்துவைக்கப்பட்டன. அவையாவன களுத்துறை கிளைக்குரிய பயாகல பாவனையாளர் சேவை நிலையம், நீர்கொழும்பு கிளைக்குரிய ஜாஎல பாவனையாளர் சேவை நிலையம், கோட்டே கிளைக்குரிய கொடிகாவத்த பாவனையாளர் சேவை நிலையம் மற்றும் காலி கிளைக்குரிய அம்பலங்கொட பாவனையாளர் சேவை நிலையம் என்பனவாகும்.

கம்பனியானது அதன் ஆரம்பம் முதல் பாவனையாளர்களது முழுமையான திருப்திக்காக சேவையாற்றி வருகின்ற போதிலும், கம்பனித் தொழிற்பாடுகளிற்கு நன்மைபயக்கும் சந்தைப்படுத்தல் வகிபாகம் ஒன்றின் ஊடாக உழைக்கப்பட வேண்டிய ஆதாயங்களை கம்பனி இனங்கண்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டில், கம்பனிக்குரிய அவ்வாறான தேவைகள் இனங்காணப்பட்ட பின்னர், கம்பனிக்கு ஊடகப் பிரச்சாரமொன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இது செயற்பாட்டுப் பிரிவின் கீழுள்ள வாடிக்கையாளர் சேவைத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்டது.

இந்தப் பிரச்சார வேலைத்திட்டம் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள் குறித்து பொதுமக்களை வழிப்புணர்வூட்டும் வகையிலமைந்த பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி வர்த்தக விளம்பரங்கள், டிஜிட்டல் ஊடக மற்றும் பதாகைகளை உள்ளடக்கியிருந்தது. கம்பனிக்கு பிரபல்யத்தை ஈட்டித்தரும் பிரச்சார நடவடிக்கையாக இதனை கம்பனி கருதாது, இந்தப் பிரச்சாரத்தின் மூலம் எரிசக்தியை சேமிக்கும் ஒரு உத்தியாக பொது மக்களிற்கு வழிப்புணர்வை ஏற்படுத்தி கம்பனியின் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றும் எண்ணத்துடன் இது மேற்கொள்ளப்பட்டது. சமூக ஊடக சந்தைப்படுத்தல் பிரச்சாரமானது இளைஞர்கள் மத்தியில் பிரபல்யத்தை ஏற்படுத்துவதற்கு உதவியிருந்தது. பாவனையாளர்கள் கம்பனிக்கு முதற்தடவையாக விஜயம் மேற்கொள்கையில் அவர்களிற்கு வழிப்புணர்வை ஊட்டும் விதத்தில் இந்தப் பிரச்சாரத்தின் போது பதாகைகள் ஒவ்வொரு கிளைகள் மற்றும் பாவனையாளர் சேவை நிலையங்களின் முன்வாயிலில் பொருத்தப்பட்டன.

பத்திரிகை விளம்பரம்

கிளையிலுள்ள பதாகை

மனித வளம் மற்றும் நிர்வாகம்

2019 ஆண்டில் அடைவதற்கு இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு ஏற்ற வகையில் ஊக்கப்படுத்திய, அர்ப்பணிப்புள்ள மற்றும் தொழில்நுட்பத் திறன்கொண்ட மனித மூலதனத்தை வழங்கியமை காரணமாக இந்த ஆண்டில் கம்பனியின் செயலாற்றல் சிறந்த நிலையில் காணப்பட்டது. கம்பனியின் மிகப் பெறுமதிமிக்க வளமான மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்வதற்கும் தூண்டுவதற்கும் நடப்பாண்டில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டன.

பயிற்சியும் அபிவிருத்தியும்

2019 ஆம் ஆண்டில், பதவியணியினர் அவர்களின் திறன்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவினை வளத்துக் கொள்வதற்காக அவர்களிற்கு உள்நாட்டு பயிற்சிகள், வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாநாடுகளும் கருத்தரங்குகளும் ஏற்பாடுசெய்து வழங்கப்பட்டன. பின்வருவன மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட அவ்வாறான சில நிகழ்ச்சித்திட்டங்களாகும்.

- உலக வங்கியில் தெற்காசிய பாலின மற்றும் எரிசக்தி வசதி (SAGE) ஏற்பாடு செய்திருந்த தெற்காசியாவில் மின்வலுத் துறை நிபுணத்துவ வலையமைப்பில் பெண்களின் நிலை என்ற முதலாவது பிராந்திய மாநாட்டில் இலங்கையின் மின்வலுத் தறை நிறுவனங்களின் பங்கேற்பு.
- ஏடிபி ஏற்பாடு செய்திருந்த "பங்களாதேசில் சமூகப் பின்னடைவு உள்ளடக்கம்" குறித்த மாநாடு.
- ஏடிபி-கொரியா புதிய எரிசக்தி வணிக மாநாடும் தொழில்நுட்ப சுற்றுப்பயணமும்
- ஏடிபி ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட கேள்வி-பக்க ஆற்றல் திறன் குறித்த அறிவினைப் பகிர்ந்துகொள்ளல் செயலமர்வு.
- KGGTF அறிவுப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஏடிபீ ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட KGID 2019.
- ஏடிபி ஸ்மார்ட் வலையமைப்பை செயற்படுத்துவதற்கான வீதி வரைபடத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயலமர்வு: தெற்காசிய மாநாட்டின் எண்ணக்கருக்கள், நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பம்.
- பொறியியல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை (பெய்ஜிங்) கம்பனி லிமிடட் (ஐஇரீ) இனால் ஏற்பாடு செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க மின்வலு உற்பத்தி தொடர்பான 8 ஆவது ஐஇரீ சர்வதேச மாநாட்டில் (ஆர்பிஜி 2019) ஒரு ஆய்வுக் கட்டுறையை முன்வைத்தல்.

ஊழியர்களின் எதிர்கால அபிவிருத்திக்குத் தேவையான பட்டப்பின் படிப்பு நடவடிக்கைகளிற்காக கம்பனியின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் நிதி உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு அனைத்து ஊழியர்களிற்கும் வாய்ப்புள்ளது. அதற்கமைய, இந்த வசதி இரண்டு ஊழியர்களிற்கு வழங்கப்பட்டதுடன், தொழில்சார் நிறுவனங்களிலிருந்து தொழில்சார் தகைமைகளை பெற்றுக்கொண்டுள்ள பதவியணியினர் மாதாந்த உயர்தொழில் படிகளையும் வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தையும் பெற்றுக்கொள்கின்றனர்.

பல்லினத்தன்மை ஊழியப்படை

கம்பனி, வேலைத்தள பல்லினத்தன்மையை ஆட்சேர்ப்புக் கட்டத்திலிருந்து ஊக்குவிக்கின்றது. பல்லினத்தன்மை என்பது இன, மத, பாலின, உடல், கலாச்சார பல்லினத்தன்மையை உள்ளடக்கியதாகும். ஏனெனில் பல்லினத்தன்மை முற்போக்குமிக்க திறன்கள் மற்றும் அனுபவத்தில் செழுமையைக் கொண்டு வருகின்றது. இதன்மூலம் திறமையுள்ள குழாம் ஒன்றும் நிறுவனத்தில் கண்டுபிடிப்புக்களும் வளர்ச்சிக்கான வளங்களும் உருவாகின்றது. தெரிவுசெய்து ஆட்சேர்த்தல் முதல் தொழில் அறிமுகம், செயலாற்றல் மதிப்பீடு செயலாற்றல் முகாமைத்துவம் வரையிலும் அத்துடன் தேவையேற்பட்டால், ஒழுக்காற்று நடைமுறைகள், துயர் துடைப்பு மற்றும் நலன்புரி வரையிலுமான ஒரு ஊழியரின் வாழ்க்கைச் சுழற்சியை திறம்பட நிர்வகிக்கும் செயன்முறைகள் இதில் உள்ளடங்கும்.

மனித வளம் மற்றும் நிர்வாகம் (தொடர்ச்சி...)

கம்பனி பதவியணியிலுள்ள அநேகமானோர் ஆரம்பம் முதலே அதன் பயணத்தின் ஒரு பகுதியினராக இருந்துள்ளனர் என்பதும், நிறுவனத்தின் வளர்ச்சிப் பாதையினை அவர்கள் பின்தொடர்ந்துள்ளனர் என்பதும் எமது பதவியணியினருடன் எமக்குள்ள உறவினைக் காட்டுகின்றது. இதன்காரணமாக, கம்பனி தொழில்துறையிலுள்ள ஏனைய நிறுவனங்களைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றது. அத்துடன், 15 புதிய ஊழியர்கள் பதவியணிக்கு ஆட்சேர்க்கப்பட்டனர்.

2019 ஆம் ஆண்டில், எமது வேலைப்படை 1535 ஆகக் காணப்பட்டதுடன், இதில் புதிதக ஆட்சேர்க்கப்பட்டோரும் உள்ளடங்கியுள்ளனர். அவர்கள் ஏழு கிளைகளிற்கும் தலைமை அலுவலகத்திற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனர்.



ஊழியர் நலன்புரி

தலைமை அலுவலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் 200 பதவியணியினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் உடவலவ்வ சபாரி ஹோட்டலில் 2019 நவம்பர் 2 மற்றும் 3 ஆந் திகதிகளில் இடம்பெற்றது. நலன்புரி குழுவிலுள்ள உறுப்பினர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர். அத்துடன் இந்நிகழ்வு வெற்றிமிக்கதாகவும் களிப்புறக் கூடியதாகவும் அமைந்திருந்தது. கம்பனியிலுள்ள அனைத்து ஊழியர்களும் 2019 இன் விடுமுறையினைக் கழிப்பதற்காக அரை மாதச் சம்பளத்திற்கு சமமான தொகையினை விடுமுறைகாலப் படியாக பெற்றுக் கொண்டனர்.

அனைத்து ஊழியர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் கம்பனியினால் பெற்றுக்கொண்ட சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலைச் செலவிற்கான காப்புறுதித் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். அநேக ஊழியர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் நன்மையடைந்துள்ளனர். அத்துடன் கம்பனியினால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தின் ஊடாக பத்து ஊழியர்களிற்கு ரூபா 800,000 வீதம் அவர்களது கடுமையான நோய்களிற்காக நிதி உதவி வழங்கப்பட்டது.

மீளாய்வாண்டின் போது, கம்பனியின் உதவியுடன் நலன்புரிச் சங்கம் இரத்த தானம் வழங்கும் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். ஏறத்தாழ 50 ஊழியர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

நிதிசார் மீளாய்வு

வருமானம்

இவ்வாண்டில் கம்பனியின் குழுமத்தினது வருமானம் ரூபா 33.71 பில்லியனுக்கு 5.9 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், இதற்காக கம்பனியின் மின்சார விநியோகம் 4.9 சதவீத வளர்ச்சியின் மூலம் உதவியிருந்தது. அதேவேளை, அன்டெ லெகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் அதனது வருமானத்தை ரூபா 1.25 பில்லியனுக்கு அதாவது 42 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. குழுமத்தின் மொத்த வருமானத்திற்கு 96 சதவீத பங்களிப்பினை மின்சார விநியோகம் வழங்கியிருந்தது. இந்த வருமானம் பல்வேறு கட்டண வீதங்களின் கீழ் உழைக்கப்பட்டிருந்ததுடன், நீர்கொழும்பு முதல் காலி வரையான பிரதேசங்களிலுள்ள 568,250 பாவனையாளர்கள் இதற்குப் பங்களித்திருந்தனர்.



மொத்த இலாபம்

ஆண்டின் போது குழுமத்தின் மொத்த இலாபம் ரூபா 5.38 பில்லியனுக்கு அதாவது 9.15 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேவேளை, கம்பனியின் மொத்த இலாபம் 6.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அன்டெ லெகோ மீற்றரிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் இன் மொத்த இலாபம் முன்னைய ஆண்டின் ரூபா 7.5 மில்லியன் மொத்த நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 113 மில்லியன் மொத்த இலாபத்திற்கு அதிகரித்திருந்தது. ஆண்டாண்டு ரீதியாக 16 சதவீத மொத்த இலாப எல்லையினை பேணுவதற்கு குழுமத்திற்கு முடிந்திருந்தது.

வரிக்குப் பின்னரான இலாபம்

முன்னைய ஆண்டின் ரூபா 3.17 பில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் மொத்த இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து, வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் இடமிருந்து கிடைத்திருந்த ரூபா 1.99 பில்லியன் பங்கிலாபம் வரிக்குப் பின்னரான இலாபத்தில் ஏற்பட்ட ரூபா 3.9 பில்லியன் இலாபத்திற்கு காரணமாகியிருந்தது. இருப்பினும், முன்னைய ஆண்டின் ரூபா 2.9 பில்லியன் தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 2.7 பில்லியனுக்கு குறைவடைவதற்கான காரணம் விசேடமாக பிற்போட்ட வரிச் சீராக்கலிற்கான வரிக்கான ஏற்பாடு அதிகரித்தமையாகும். இதன் காரணமாக தேறிய இலாபம் 7 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது.

பங்கொன்றுக்கான உழைப்பு

குழுமத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான ரூபா 25.73 இற்கு எதிராக மீளாய்வாண்டிற்கான பங்கொன்றிற்கான உழைப்பு ரூபா 23.76 ஆகக் காணப்பட்டது. கம்பனியின் 2018 ஆம் ஆண்டிற்கான ரூபா 25.94 இற்கு எதிராக மீளாய்வாண்டிற்கான பங்கொன்றிற்கான உழைப்பு ரூபா 23.46 ஆகக் காணப்பட்டது.

பங்கிலாபம்

2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனி பங்கொன்றிற்கு ரூபா 10.04 வீதம் ரூபா 1.15 பில்லியன் பங்கிலாபம் செலுத்தியிருந்தது.

நிதிசார் மீளாய்வு (தொடர்ச்சி...)

உரிமைத்துவம் மீதான திரும்பல்

குழுமத்தின் உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் 8.2 சதவீதமாக காணப்பட்ட அதேவேளை கம்பனியின் உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் 2018 ஆம் ஆண்டின் 9.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.2 சதவீதமாகக் காணப்பட்டது. ஆண்டிற்கான இலாபத்தினை ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் காணப்பட்ட மொத்த சராசரி உரிமை மூலதனத்தினால் வகுத்து உரிமை மூலதனம் மீதான திரும்பல் கணிக்கப்படுகின்றது.

மொத்தச் சொத்துக்கள்

பிரதானமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கையேற்றல் மற்றும் கால வைப்புக்களிலும் இருப்பிலும் ஏற்பட்ட அதிகரிப்பினால் மொத்தச் சொத்து அதிகரித்திருந்தது. குழுமத்தின் மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 48.2 பில்லியனுக்கு அதாவது 8.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

மொத்தப் பொறுப்புக்கள்

குழுமத்தின் மொத்தப் பொறுப்புக்கள் 50 சதவீதமான நீண்டகாலப் பொறுப்புக்களையும் (2018 இல் 49 சதவீதம்) 50 சதவீதமான நடைமுறைப் பொறுப்புக்களையும் (2018 இல் 51 சதவீதம்) பிரதிநிதித்துவம் செய்திருந்தது. குழுமத்தின் நீண்டகாலப் பொறுப்புக்களில் பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள், பிற்போட்ட வரி வருமானங்கள் மற்றும் ஓய்வூதிய நலக் கடப்பாட்டு ஏற்பாடு என்பன உள்ளடங்கியிருந்தன. வட்டிக் கடன்பெறுகைகள் SLFRS – 16 குத்தகைகள் என்பதன் கீழ் குத்தகைப் பொறுப்புக்களில் உள்ளடங்கியுள்ளது.

மொத்த உரிமைத்துவம்

குழுமத்தின் உரிமைத்துவம் மொத்தச் சொத்துக்களில் 70 சதவீதமாக காணப்படுவதுடன் ரூபா 0.150 பில்லியன் கட்டுப்பாடற்ற வட்டி உள்ளடங்களாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது ரூபா 33.97 பில்லியனாக காணப்பட்டது.

காசுப் பாய்ச்சல்

குழுமத்தின் தேறிய செயற்பாட்டுக் காசு உட்பாய்ச்சல் முன்னைய ஆண்டின் ரூபா 0.684 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 1.8 பில்லியனாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வினைத்தறனான கடன் சேகரிப்பாக இது காணப்பட்டு உயர் தொழிற்படு மூலதனத் தேவைக்கு பங்களிப்பை வழங்கியது. குழுமத்தின் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 0.828 பில்லியனாகக் காணப்பட்டது. ரூபா 1.05 பில்லியன் பங்கிலாபக் கொடுப்பனவு காரணமாக நிதிச் செயற்பாட்டிலிருந்து ரூபா 1.0 பில்லியன் தேறிய காசு வெளிப்பாய்ச்சல் காணப்பட்டது.

கூட்டிணைந்த ஆளுகை

கூட்டிணைந்த ஆளுகைக்காக தாபிக்கப்பட்டுள்ள சிறந்த நடைமுறைகளை குழுமம்.ஃ.கம்பனி பின்பற்றுகின்றது என உறுதிப்படுத்தப்படுவதுடன் அவற்றின் வணிகத்தை நடாத்துகையில் உயர் ஒழுக்க நியமங்களும் உறுதிசெய்யப்படுகின்றன.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

முகாமைத்துவ மீளாய்வு

கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தொழில்சார் தகைமை கொண்ட பதவியணியினரை உள்ளடக்கியிருப்பதுடன், உயர்தொழில் பராமரிப்புடன் கடமையாற்றுகின்றது. அத்துடன், கம்பனியானது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் மேற்பார்வை செய்யப்படுவதனால் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகும் வகையில் பொதுமக்களின் ஆர்வங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான விரிவான அர்த்தமுள்ள தகவல்களை வழங்குவதன் மூலம் கம்பனியின் உயர்தரமான நிர்வாகத்திற்கு இத்திணைக்களம் உதவுகின்றது.

2019 ஆம் ஆண்டில், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்கள விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம், அதனுடன் தொடர்புடைய நிபுணர்களுடனான விரிவான கலந்துரையாடலின் பின்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. கம்பனியின் பருமண் மற்றும் செயற்பாடுகளின் தன்மையுடன் ஒப்பிடுகையில் அதன் உள்ளகக் கணக்காய்வுப் பரிவு மிகச் சிறியதாக காணப்படுகின்றது என்பதாக 2016 ஆம் ஆண்டிற்கான வெளிவாரி கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதத்தின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த விடயத்திற்கமைய இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கணக்காய்வு வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், முக்கியமான அனைத்து விடயப் பரப்புக்களையும் உள்ளடக்கும் விதத்திலான ஆரம்ப வேலைத்திட்டம் ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

கணக்காய்வுப் பிரிவு தலைமை அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் கிளைகள், வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டுப் பிரிவுகளான மின்மானி பரிசோதனை ஆய்வுகூடம், பயிற்சி நிலையங்கள் மற்றும் களஞ்சியங்கள் (இருப்பு) போன்றவற்றிற்கு விஜயம் செய்யப்படுவதுடன் தலைமை அலுவலகத்திலுள்ள பிரிவுகள்.்.கிளைகளிலும் கணக்காய்வுப் பணியினை மேற்கொள்கின்றது.

தலைமை அலுவலகத்திலுள்ள பிரிவுகள்.்.கிளைகளில் சுழற்சி அடிப்படையில் கணக்காய்வு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப திட்டத்திற்கமைய மீளாய்வாண்டில் அனைத்துத் தொழிற்பாட்டுப் பிரிவுகள் மற்றும் கொத்தணிகளை உள்ளடக்கிய விதத்தில் உள்ளகக் கணக்காய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. கிளைகளிற்குரிய கணக்காய்வு அறிக்கைகள் தலைவரினால் அக்கிளைகளின் தொடர்புடைய பதவியணியினருடன் விரிவாக கலந்துரையாடப்பட்டு அந்த அறிக்கைகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் அதில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சரிசெய்வதற்குத் தேவையான ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

நல்லாளுகை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கம்பனியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பணிப்பாளர் சபையில் திறைசேரிப் பிரதிநிதியாக உள்ள அங்கத்தவரின் தலைமையின் கீழ் 3 பணிப்பாளர் சபை உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. கம்பனிச் செயற்பாடுகளின் தரத்தினை முன்னேற்றுதல், தெளிவு, வெளிப்படையான தன்மை மற்றும் நல்லாளுகையினை மேம்படுத்துவதற்கான நோக்குடன் புதிய திருத்தங்கள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு அமைவாக அதன் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

மீளாய்வாண்டு காலத்தில் அவ்வாறான நான்கு பயனுள்ள கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வுச் சட்டகம்

கம்பனியின் வேலைச் செயலாற்றுகைகளில் நேர்மைத்தன்மை மற்றும் தெளிவு என்பவற்றைத் தரமுயர்த்தும் வகையில் உள்ளகக் கணக்காய்வுச் சட்டகம், 2020 யூன் முதல் செல்லுபடியாகும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் செயன்முறையின் போது ஆர்வத்துடன் பங்குபற்றி கருமமாற்றிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினருக்கு உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் அதனது விசேட நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.


சீஆர்ம

வாடிக்கையாளர் உறவு டிஜிட்டல்மயமாக்கல் (சீஆர்டீ)

எங்கள் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்களை மீறும் சேவையை வழங்கும் போது அவர்களுடன் ஆரோக்கியமான மற்றும் பயனுள்ள தொடர்புகளை நிர்வகிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மென்மேலும் வலுப்படுத்த, டிஜிட்டல் மயமாக்கலின் அடிப்படையில் நாங்கள் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கிய வசதிகளை மேம்படுத்துவதற்காக எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம்.

சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தின் நன்மதிப்பு வணிக நீண்ட ஆயுளைப் பொறுத்தவரை நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். எனவே தொடர்ச்சியான தொடர்பாடலை வைத்திருப்பதற்கும் தேவையான மற்றும் புதுப்பித்த தகவல்களை டிஜிட்டல் தளங்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கக்கூடியதாகவும் அணுகக்கூடியதாகவும் மாற்ற முயற்சிக்கிறோம். தொடர்ச்சியான வாடிக்கையாளர் தொடர்பு எங்களுடன் எப்போதும் இருப்பதனை உறுதிசெய்ய நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக எங்கள் இணையதள முன்னிலைப்படுத்தல் மற்றும் செயல்பாட்டை மேம்படுத்துதல் என்பன காணப்படுகின்றன. வாடிக்கையாளர்களின் மின்சார நுகர்வு தொடர்பாக பில் கட்டணம் செலுத்துதல், பதிவு செய்தல் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களை அணுக வாடிக்கையாளர்களை இணையதளம் அனுமதிக்கிறது. அதோடு எங்கள் இணையதளத்திற்கு மாற்றாக செயல்படக்கூடிய ஒரு ஸ்மார்ட் போன் பயன்பாட்டை அறிமுகப்படுத்துவதற்கான எங்கள் முயற்சிகள், எங்கள் வாடிக்கையாளர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மதிப்பைச் சேர்க்க பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளன. தற்போதைய கால கட்டத்தில் ஸ்மார்ட் போன்கள் அனைவரின் வாழ்க்கையிலும் இன்றியமையாத பகுதியாக இருப்பதால் எங்கள் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டை நாங்கள் தவறாக புரிந்துகொள்ள முடியாது.

மேலும், எங்கள் இணைய முன்னிலைப்படுதலை தொடர்ந்து பேணிவருவதற்கு சமூக ஊடக தளங்களில் எங்கள் ஈடுபாட்டை விரிவுபடுத்த விரும்புகின்றோம். இன்று சமூக ஊடகங்கள் உலகில் எங்கும் ஏராளமான மக்களால் இணைக்கப்பட்டு நுகரப்படுகின்றன. மேலும், இது வணிக மேம்பாட்டிற்கு வருகையில் வருகையில் அனைத்துத் தடைகளையும் வரம்புகளையும் உடைத்தெறிந்து விட்டது. இது சம்பந்தமாக பெறுமதிசேர்க்கும் ஊடக உள்ளடக்கத்தின் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து கல்வி கற்பதற்கும் புதுப்பிப்பதற்கும் இணைப்பதற்கும் சமூக ஊடக தளங்களை நாங்கள் பயன்படுத்துவதால் இந்த போக்கின் முழு நன்மையையும் முழுமையாகப் பெறுவதில் கவனம் செலுத்துகின்றோம்.

எமது மின்வலு வழங்குநர்களின் பெறுமதியை நாங்கள் புரிந்துவைத்துள்ளோம். எதிர்கால மின்சார சந்தையில் முக்கிய பங்குதாரர்களில் ஒருவராக நாங்கள் அவர்களைக் கருகின்றோம். எனவே, அவர்களின் மின்சார உற்பத்தியில் பங்கேற்கவும், அவர்களின் பங்களிப்பை விநியோக வலையமைப்பில் ஒருங்கிணைக்கவும் வாய்ப்புக்களை வழங்க நாங்கள் விரும்புகின்றோம். அந்த நோக்கத்தை மனதில் கொண்டு முதிர்ச்சியடைந்த வணிக மாதிரிகள் மூலம் அவர்களை நாங்கள் அரவணைக்கின்றோம். அந்த நோக்கத்தை மனதிற்கொண்டு, முதிர்ச்சிமிக்க வணிக அமைப்பின் ஊடாக சந்தைக் கேள்விக்கு ஏற்ப எரிசக்தி உற்பத்தியினை மேற்கொண்டு விநியோகத்தை சமநிலைப்படுத்துவதற்கு நாம் அவர்களைத் தூண்டுகின்றோம்.

எங்கள் வாடிக்கையாளர்களின் வாழ்க்கையை எளிதாக்குவதில் அதிகூடிய கவனம் செலுத்தி, டிஜிட்டல்மயமாக்கலின் முன்முயற்சிகள் மூலம் எங்கள் நிறுவனத்தில் செயல்திறனை அதிகரிப்பதற்காக நாம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்கின்றோம். அந்த இடைவிடா நோக்கில், எங்கள் வாடிக்கையாளர்களின் கட்டண பொறிமுறையை தொடர்ந்து மேம்படுத்துவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஒரு சில பொத்தான்களைக் கிளிக் செய்வதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் மொபைல் போன்கள் மூலமாக கூட பணம் செலுத்தும் நடைமுறைகளை முடிக்கக்கூடிய அளவிற்கு கட்டணச் செயன்முறையை எளிதாக்குவதே எங்கள் இறுதி குறிக்கோளாகும். வாடிக்கையாளர் கட்டணம் செலுத்தும் நடைமுறையில் அந்த அளவிலான நெகிழ்வுத்தன்மையை நிறைவேற்ற வாடிக்கையாளர் மைய மொபைல் பயன்பாட்டை அறிமுகப்படுத்த முடியும். அத்துடன் வலைத்தளத்தின் மூலம் பணம் செலுத்தவும் முடியும். எனவே பொதுமக்கள் இந்தக் கொடுக்கல் வாங்கல்களை தங்கள் சொந்த வசதியுடன் முடிக்க முடியும். இதற்கிடையில் கொடுப்பனவுகள் தொடர்பான அனைத்து உள் நடைமுறைகளையும் ஒருங்கிணைத்து விரிவான கட்டண முகாமைத்துவ முறைமையை உருவாக்கின்றோம்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.
பிஓஈ/ஈ/எல்ஈசிஓ/எ/ப்எஸ்/2019/34

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2020 ஆகஸ்ட் 31

தலைவர்
லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட்

லங்கா மின்சார (தனியார்) கம்பனி லிமிடட் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

லங்கா மின்சார (தனியார்) கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் (குழுமம்) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

கம்பனியினதும் குழுமத்தினதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவிலும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 163(1) (ஈ) பிரிவிலும் உள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு கம்பனி முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

- 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் கம்பனி மற்றும் குழுமம் இணங்கியிருந்தன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், கம்பனியினது ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு கம்பனியின் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

பிரகாரம், ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது கம்பனியின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செற்பட்டிருந்தது என்றும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், கம்பனியின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் வளங்கள் காலப்பகுதியினுள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் ஏற்புடையற்பாலான சட்டதிட்டங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும்,

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான	குறிப்பு	குழும் 2019 ரூபா '000	குழும் 2018 ரூபா '000	கம்பனி 2019 ரூபா '000	கம்பனி 2018 ரூபா '000
வருமானம்	4	**33,710,930**	31,827,090	**32,460,557**	30,943,889
விற்பனைக் கிரயம்		**(28,330,701)**	(26,897,850)	**(27,193,532)**	(26,007,451)
மொத்த இலாபம்		**5,380,229**	4,929,240	**5,267,025**	4,936,438
ஏனைய செயற்பாட்டு வருமானம்	5	**2,733,393**	1,882,505	**2,732,010**	1,885,356
செயற்பாட்டுச் செலவினம்		**(2,430,040)**	(2,546,817)	**(2,423,086)**	(2,546,105)
நிர்வாகச் செலவினம்		**(3,062,843)**	(2,363,027)	**(3,039,440)**	(2,327,604)
செயற்பாட்டு இலாபம்		**2,620,739**	1,901,901	**2,536,509**	1,948,085
நிதி வருமானம்	6.1	**1,541,363**	1,332,554	**1,536,542**	1,325,962
நிதிக் கிரயம்	6.2	**(162,203)**	(60,624)	**(145,259)**	(56,744)
வரிக்கு முன் இலாபம்	7	**3,999,899**	3,173,831	**3,927,792**	3,217,304
வருமான வரிச் செலவினம்	8	**(1,264,513)**	(236,129)	**(1,240,993)**	(247,423)
ஆண்டிற்கான இலபம்		**2,735,386**	2,937,702	**2,686,799**	2,969,881
இலபம் பகிரப்படுதல் :					
- கம்பனியின் உரிமைத்துவ பங்காளர்கள்		**2,720,852**	2,946,320		
- கட்டுப்பாடற்ற வட்டி		**14,534**	(8,618)		
ஆண்டிற்கான இலாபம்		**2,735,386**	2,937,702		
பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (ரூபா)	9	**23.76**	25.73	**23.46**	25.94

பக்கம் 46 முதல் 89 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான	குறிப்பு	குழுமம் 2019 ரூபா '000	குழுமம் 2018 ரூபா '000	கம்பனி 2019 ரூபா '000	கம்பனி 2018 ரூபா '000
ஆண்டிற்கான இலபம்		**2,735,386**	2,937,702	**2,686,799**	2,969,879
ஏனைய முற்றுமடங்கிய வருமானம்					
தொடர்ந்துவரும் காலத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மீளவகைப்படுத்தப்பட வேண்டிய ஏனைய முற்றுமடங்கிய வருமானம்					
எ.்.ப்வீஓசீஐ கருவிகள் மீதான நயம்	21.4	**220,747**	316,187	**220,747**	316,187
எ.்.ப்வீஓசீஐ கருவிகளின் தேறிய சந்தைப் பெறுமதி மாற்றங்கள் மீதான பிற்போட்ட வரி		**44,419**	(31,619)	**44,419**	(31,619)
தொடர்ந்துவரும் காலத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மீளவகைப்படுத்த வேண்டிய தேவையற்ற ஏனைய முற்றுமடங்கிய வருமானம்					
வரையறைத்துரைத்த நலக் கடப்பாடுகள் மீதான உள்ளபடியான நயம் (நட்டம்)	24.1	**(30,595)**	(15,544)	**(29,807)**	(15,544)
உள்ளபடியான நட்டம் மீதான பிற்போட்ட வரி மீளறவீடு		**8,567**	4,352	**8,346**	4,352
ஆதனம், பொறி, உபகரண மீள்மதிப்பீடு	21.2	**-**	245,853	**-**	245,853
மீள்மதிப்பீட்டு மிகை மீதான பிற்போட்ட வரி மாற்றம்		**-**	(148,240)	**-**	(148,240)
ஏனைய முற்றுமடங்கிய வருமனம், வரியின் தேறியது		**243,137**	370,990	**243,705**	370,990
ஆண்டிற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்		**2,978,523**	3,308,692	**2,930,504**	3,340,870
இலபம் பகிரப்படுதல் :					
- கம்பனியின் உரிமைத்துவ பங்காளர்கள்		**2,963,989**	3,317,310		
- கட்டுப்பாடற்ற வட்டி		**14,534**	(8,618)		
		2,978,523	3,308,692		
பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (ரூபா)	9	**23.76**	25.73	**23.46**	25.94

பக்கம் 46 முதல் 89 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன.

நிதி நிலைமைக் கூற்று

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான	குறிப்பு	குழும 2019 ரூபா '000	குழும 2018 ரூபா '000	கம்பனி 2019 ரூபா '000	கம்பனி 2018 ரூபா '000
சொத்துக்கள்					
நடைமுறையல்லாத சொத்துக்கள்					
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	10	**13,613,721**	13,168,188	**13,280,678**	12,875,196
முதலீட்டு ஆதனம்	11	**-**	-	**124,538**	127,847
கற்புலனாகாத சொத்துக்கள்	12	**37,813**	52,038	**30,479**	2,872
துணைக் கம்பனியில் முதலீடுகள்	13	**-**	-	**31,320**	31,320
ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் ஊடான நியாய விலையிலுள்ள நிதிச் சொத்துக்கள்	14	**10,806,210**	10,585,463	**10,806,210**	10,585,463
பங்குகளிற்கான முற்பணம்	15	**-**	-	**47,085**	47,085
சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை	16	**145,388**	-	**145,388**	-
ஏனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள்	19	**1,751,207**	1,650,782	**1,751,207**	1,650,782
மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்		**26,354,339**	25,456,471	**26,216,906**	25,360,555
நடைமுறைச் சொத்துக்கள்					
இருப்புக்கள்	17	**2,084,383**	2,001,129	**1,802,136**	1,800,123
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	18	**3,331,396**	3,671,098	**3,015,604**	3,494,197
முற்செலுத்துகைகளும் முற்பணங்களும்		**249,09**	430,170	**249,084**	425,956
ஏனைய நிதிச் சொத்துக்கள்	19	**15,905,707**	14,306,698	**15,865,70**	14,265.068
காசும் வங்கி மீதிகளும்	20	**366,494**	416,210	**347,399**	408,975
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**21,937,078**	19,174,523	**21,279,931**	18,746,464
மொத்தச் சொத்துக்கள்		**48,291,418**	44,630,994	**47,496,836**	44,107,019
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்					
தாய்க் கம்பனியின் உரிமை பங்குதாரர்களிற்கு பகிரப்படவேண்டிய உரிமையாண்மை					
கூறப்பட்ட மூலதனம்	21.1	**1,145,067**	1,145,067	**1,145,067**	1,145,067
ஒதுக்கங்கள்					
காணி கட்டிட மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	21.2	**1,854,817**	1,854,817	**1,784,965**	1,784,965
வருமான ஒதுக்கம்	21.3	**340,642**	340,642	**340,642**	340,642
நியாயப் பெறுமதி ஒதுக்கம்	21.4	**8,752,517**	8,487,351	**8,752,517**	8,487,351
நிறுவைத்த உழைப்புக்கள்		**21,725,353**	20,176,529	**21,513,410**	19,998,104
தாய்க் கம்பனியின் உரிமை பங்குதாரர்களிற்கு பகிரப்படவேண்டிய மொத்த உரிமையாண்மை		**33,818,395**	32,004,404	**33,536,601**	31,756,128
கட்டுப்பாடற்ற வட்டி		**150,631**	136,097	**-**	-
மொத்த உரிமைத்துவம்		**33,969,027**	32,140,502	**33,536,601**	31,756,128
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்					
வட்டிக் கடன் பெறுகைகள்	22	**87,521**	-	**87,521**	-
பிற்போட்ட வரிப் பொறுப்பு	8.3	**1,119,750**	573,810	**1,117,700**	583,733
பிற்போட்ட வருமானம்	23	**4,759,696**	4,564,978	**4,759,696**	4,564,978
இளைப்பாற்று நலக் கடப்பாடுகள்	24	**1,144,179**	1,012,484	**1,141,440**	1,010,771
		7,111,146	6,151,272	**7,106,357**	6,159,481
நடைமுறைப் பொறுப்புக்கள்					
வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்	25	**6,884,702**	6,035,620	**6,527,338**	5,888,994
செலுத்த வேண்டிய வருமான வரி		**266,861**	278,471	**266,861**	278,471
வட்டிக் கடன் பெறுகைகளின் நடைமுறை தொகை	22	**59,679**	25,128	**59,679**	21,029
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**7,211,243**	6,339,219	**6,853,878**	6,188,494
மொத்தப் பொறுப்புக்கள்		**14,322,389**	12,490,491	**13,960,235**	12,350,902
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்		**48,291,418**	44,630,994	**47,496,836**	44,107,019

இந்த நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன என நான் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

பிரதான நிதி உத்தியோகத்தர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
சபையின் சார்பாக அங்கீகரித்துக் கையொப்பமிடப்படுகின்றது.

தலைவர்/பணிப்பாளர்

பணிப்பாளர்

பக்கம் 46 முதல் 89 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன.

2020 யூலை 29

கொழும்பு 3

உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று

குழுமம்

	தாய்க் கம்பனியின் உரிமையாளருக்கு பகிரத்தக்கவை						கட்டுப்பாடற்ற வட்டி	மொத்த உரிமை
	கூறப்பட்ட மூலதனம்	வருமான ஒதுக்கம்	மீள்மதிப்பீட்டு மிகை	நியாயப பெறுமதி ஒதுக்கம்	நிறுத்தி வைத்த உழைப்பு	மொத்தம்		
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	1,757,203	8,202,782	17,941,409	29,387,103	146,184	29,533,287
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	2,946,320	2,946,320	(8,618)	2,937,702
ஏனைய முற்றுமடங்கிய வருமானம்	-	-	97,613	284,569	(11,200)	370,982	(8)	370,990
ஆண்டிற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்	-	-	97,613	284,569	2,935,120	3,317,302	(8,610)	3,308,692
தாய்க் கம்பனியால் செலுத்திய பங்கிலாபம்	-	-	-	-	(700,000)	(700,000)	-	(500,000)
துணைக் கம்பனிகளால் செலுத்திய கடற்பாடற்ற வட்டிக்கான பங்கிலாபம்	-	-	-	-	-	-	(1,476)	(1,476)
2018 திசெம்பர் 31 இல் மீதி	1,145,067	340,642	1,854,817	8,487,351	20,176,529	32,004,405	136,097	32,140,503
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	2,720,852	2,720,852	14,534	2,735,386
ஏனைய முற்றுமடங்கிய வருமானம்	-	-	265,166	2,720,852	(22,029)	243,137	-	243,137
ஆண்டிற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்	-	-	265,166	(22,029)	2,698,824	2,963,990	14,534	2,978,523
தாய்க் கம்பனியால் செலுத்திய பங்கிலாபம்	-	-	-	-	(1,150,000)	(1,150,000)	-	(1,150,000)
2019 திசெம்பர் 31 இல் மீதி	1,145,067	340,642	1,854,817	8,752,517	21,725,353	33,818,395	150,631	33,969,027

பக்கம் 46 முதல் 89 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன.

உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று

கம்பனி

	கூறப்பட்ட மூலதனம்	வருமான ஒதுக்கம்	மீள்மதிப்பீட்டு மிகை	நியாயப் பெறுமதி ஒதுக்கம்	நிறுத்தி வைத்த உழைப்பு	மொத்தம்
	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	1,687,352	8,202,782	17,739,414	29,115,257
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	2,969,881	2,969,881
ஏனைய முற்றுமடங்கிய வருமானம்	-	-	97,613	284,569	(11,192)	370,991
ஆண்டிற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்	-	-	97,613	284,569	2,958,689	3,340,871
பங்கிலாபங்கள்	-	-	-	-	(700,000)	(700,000)
2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	1,784,965	8,487,351	19,998,072	31,756,097
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	2,686,799	2,686,799
ஆண்டிற்கான ஏனைய முற்றுமடங்கிய வருமானம்	-	-	-	265,166	(21,461)	243,705
ஆண்டிற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்	-	-	1,784,965	265,166	2,665,338	2,930,504
பங்கிலாபங்கள்	-	-	-	-	(1,150,000)	(1,150,000)
2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	1,145,067	340,642	1,784,965	8,752,517	21,513,410	33,536,601

பக்கம் 46 முதல் 89 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன.

காசுப் பாய்ச்சல் கூற்று

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான	குறிப்பு	குழும 2019 ரூபா '000	குழும 2018 ரூபா '000	கம்பனி 2019 ரூபா '000	கம்பனி 2018 ரூபா '000
செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்					
விரிக்கு முன் இலபம்		**3,999,899**	3,173,831	**3,927,792**	3,217,304
சீராக்கல்கள்					
ஆதனம், பொறி மற்றும் உபகரண பெறுமானத்தேய்வு		**892,193**	896,603	**865,273**	872,398
பிற்போட்ட வருமானக் காலக்கழிவு		**(386,846)**	(368,069)	**(386,846)**	(368,069)
கற்புலனாகா சொத்துக் காலக்கழிவு		**12,392**	16,756	**12,392**	14,923
முதலீட்டு ஆதன பெறுமானத்தேய்வு		**-**	-	**3,309**	1,817
சொத்து பயன்படுத்தல் உரிமை - பெறுமாதனத்தேய்வு		**-**	-	**67.120**	-
ஓய்வூதிய பணிக்கொடை ஏற்பாடு		**191,546**	142,901	**190,254**	142,517
வியாபார வருமதி மீதான காலத்தேய்வு		**562,230**	(2,026)	**562,230**	3,710
மெதுவாக நகர்வுறும் இருப்புக்களிற்கான ஏற்பாடு		**(74,115)**	49,898	**(74,115)**	49,898
பொறி, ஆதனம் மற்றும் உபகரண கைதவிர்ப்பு இலாபம் / (நட்டம்)		**20,257**	14,655	**20,257**	14,655
வட்டி வருமானம்		**(1,541,363)**	(1,332,554)	**(1,536,542)**	(1,325,962)
வட்டிக் கிரயம்		**162,203**	20,307	**145,259**	16,426
பங்கிலாப வருமானம்		**(1,993,636)**	(1,165,881)	**(1,993,636)**	(1,169,326)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு இலபம்		**1,844,760**	1,446,420	**1,802,746**	1,470,290
இருப்புக்கள் (அதிகரித்தல்)/குறைதல்		**(9,139)**	(515,964)	**72,103**	(515,249)
முற்பணங்கள் மற்றும் முற்செலுத்துகைகள் (அதிகரித்தல்)/ குறைதல்		**181,072**	(247,648)	**176,872**	(243,434)
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் (அதிகரித்தல்)/குறைதல்		**(222,529)**	(690,352)	**(83,637)**	(544,183)
வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் அதிகரித்தல்/(குறைதல்)		**849,083**	919,542	**638,344**	818,357
பிற்போட்ட வருமானம் அதிகரித்தல்/(குறைதல்)		**581,565**	627,393	**581,565**	627,393
செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்து உருவாக்கப்பட்டகாசு		**3,224,811**	1,539,390	**3,187,991**	1,613,174
செலுத்திய வருமான வரி		**(1,197,133)**	(798,203)	**(755,010)**	(746,753)
செலுத்திய வட்டி		**(162,203)**	(20,307)	**(145,259)**	(16,426)
இளைப்பாற்று பணிக்கொடைக் கொடுப்பனவு		**(59,851)**	(37,179)	**(59,585)**	(37,089)
செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு		**1,805,624**	683,701	**2,228,138**	812,906
முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்					
ஏனைய நிதிச் சொத்துக்களில் தேறிய முதலீடுகள்		**(3,350,217)**	(3,298,512)	**(3,351,847)**	(3,352,726)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய கையேற்பு		**(1,013,367)**	(1,466,931)	**(1,231,709)**	(1,398,067)
சொத்து பயன்படுத்தல் உரிமையின் தேறிய கையேற்பு		**-**	-	**(212,508)**	-
முதலீட்டு ஆதனங்களின் கையேற்பு		**-**	-	**-**	(68,943)
பெற்ற வட்டி வருமானம்		**1,541,363**	1,332,554	**1,536,542**	1,325,962
பெறப்பட்ட பங்கிலாப வருமானம்		**1,993,636**	1,165,881	**1,993,636**	1,169,326
முதலீட்டு நடவடிக்கைகளிருந்து உருவாக்கப்பட்ட/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்		**(828,585)**	(2,267,007)	**(1,265,885)**	(2,324,448)
நிதி நடவடிக்கைகளிருந்தான காசுப் பாய்ச்சல்					
தாய்க் கம்பயின் உரிமையாளர்களிற்குச் செலுத்திய பங்கிலாபம்		**(1,150,000)**	(700,000)	**(1,150,000)**	(700,000)
சொத்து பயன்படுத்தல் உரிமையின் தேறிய கையேற்பின் மீதான குத்தகைப் பொறுப்பு		**141,679**	-	**141,679**	-
கடற்பாடற்ற வட்டிப் பங்குதாரர்களிற்குச் செலுத்திய பங்கிலாபம்		**-**	(1,476)	**-**	-
நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய காசுப் பாய்ச்சல்		**(1,008,321)**	(701,476)	**(1,008,321)**	(700,000)
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றினது தேறிய அதிகரிப்பு/(குறைவு)		**(31,282)**	(2,284,782)	**(46,069)**	(2,211,542)
வருட ஆரம்பத்திலுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவையும்		**392,255**	2,675,865	**387,947**	2,599,488
வருட முடிவிலுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவையும்		**360,972**	391,082	**341,878**	387,987

பக்கம் 46 முதல் 89 வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாக உள்ளன.

1 கூட்டிணைப்புத் தகவல்கள்

1.1 பொதுவானவை

லெகோ நிறுவனம் கூட்டிணைந்த வரையறுக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஒரு பொறுப்புக் கம்பனியாகும். இதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 411, இ.எச். குரே கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகளும் செயற்பாடுகளின் தன்மையும்

இலங்கை மின்சார சபையிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்தல் மற்றும் காலி, களுத்துறை, மொரட்டுவை, களணி, நுகேகொட, கோட்டே மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள கம்பனியின் கிளை அலுவலகங்களினூடாக உள்நாட்டுக் கைத்தொழில் வாடிக்கையாளர்களுக்கு சில்லறையாக மின்சாரத்தை விற்பனை செய்தல் ஆகியன குறித்த ஆண்டு காலப்பகுதியில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளாகக் காணப்பட்டன.

துணைக் கம்பனிகளில் ஒன்றான லெகோ புரொஜக்ட் (பிரைவட்) லிமிடட் நாட்டில் மின்சார விநியோகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குகின்றது. முற்றொரு துணைக் கம்பனியான அன்டெ லெகோ மீற்றரிங் (பிரைவட்) லிமிடட் மின்சார மின்மானிகளை உற்பத்திசெய்து விநியோகித்து வருகின்றது.

1.3 தாய்க் கம்பனியும் இறுதியறுதித் கட்டுப்பாட்டுத் தரப்பும்

இந்த லெகோ கம்பனியின் தலைமை நிறுவனம் இலங்கை மின்சார சபையாகும். இலங்கை மின்சார சபை 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாகும்.

1.4 நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு அங்கீகரித்த திகதி

கம்பனியினதும் மற்றும் குழுவினதும் 2019 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிற்கு வெளியீட்டின் நிமித்தம் 2020 யூலை 29 இல் பணிப்பாளர்களால் அதிகாரமளிக்கப்பட்டன.

2 தயாரித்தல் அடிப்படை

கம்பனியின் ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (இதனகத்துப் பின்னர் ஸ்டுகுசுஸுள என்று அழைக்கப்படும்) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதி நிலைமைக் கூற்றிலுள்ள பின்வரும் பொருண்மையான விடயங்களைத் தவிர்த்து, ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் காணப்படுகின்ற நிதிச் சொத்துக்கள் நியாய விலையில் அளவிடப்படுகின்றன.

- காணிகள் மற்றும் கட்டிடங்கள் என்பன அவை கொள்வனவு செய்யப்படும் நேரத்திலுள்ள கிரயத்தில் அளவிடப்பட்டு, அதனைத் தொடர்ந்து மீள விலைமதித்தல் திகதியிலுள்ள நியாய விலையில் மீள்விலை மதிக்கப்பட்ட தொகைகளில் அளவிடப்படுகின்றன.

- திட்டவட்டமான ஓய்வூதிய நலக் கடப்பாடுகள் தொடர்பான பொறுப்புக்கள் அந்த திட்டவட்டமான ஓய்வூதிய நலக் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமானத்தில் இனங்காணப்படுகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் எடுத்துரைக்கப்படுகின்றன. ஏனைய விதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி, அனைத்துத் தொகைகளும் கிட்டிய இலங்கை ரூபா ஆயிரத்தில் (000) தரப்பட்டுள்ளன. இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன.

2.1.1 தொடர்ந்தியங்குதல் எண்ணக்கரு

கம்பனியின் முகாமைத்துவம் தொடர்ந்தியங்குதல் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்ந்து செல்வதற்கான ஆற்றல் தொடர்பான ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளனர். எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு வியாபார நடவடிக்கையைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு குழு வளங்களைக் கொண்டுள்ளது என இவர்கள் திருப்தியடைகின்றார்கள். மேலும், ஒரு நிகழ்கால அடிப்படையில் அத்தகைய நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான கம்பனியின் ஆற்றலில் கணிசமான சந்தேகங்களைத் தோற்றுவிக்கலாம் எனும் ஏதாவது பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகள்

பற்றி முகாமைத்துவத்திற்கு தெரியாது என்பதால் முகாமைத்துவம் இயக்கச் செயற்பாடுகளை ஒழிப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கு அபிப்பிராயம் தெரிவிப்பதில்லை. ஆகையால், நிதிக் கூற்றுக்களை தொடந்தியங்குதல் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்க வேண்டியுள்ளது.

2.1.2 ஒன்றிணைப்பின் அடிப்படை

ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கம்பனியினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களை உள்ளடக்கும். முதலீடு செய்யப்பட்டவர்களுடனான ஈடுபாடுகளிலிருந்து பல்வேறு திரும்பல்களை குழுமம் வெளிப்படுத்துகின்ற போதும் அல்லது உரிமையைக் கொண்டுள்ள போதும் முதலீடு செய்யப்பட்டவர்களின் மீது அதன் வலுவின் ஊடாக அத் திரும்பல்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கு ஆற்றல் உள்ள போதும் கட்டுப்பாடு அடையப்படுகின்றது. விசேடமாக, குழுமக் கட்டுப்பாடுகள் மற்றும் முதலீடு செய்யப்பட்டவர்கள் இருப்பின், குழுமம்:

- முதலீடு செய்யப்பட்டவர்கள் மீது வலுவைக் கொண்டிருக்கும். (அதாவது : முதலீடு செய்யப்பட்டவர்களின் தொடர்புடைய செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு நடைமுறை ஆற்றலை தற்போதுள்ள உரிமைகள் வழங்கும்)
- முதலீடு செய்யப்பட்டவர்களுடனான அதன் ஈடுபாட்டிற்கு பல்வேறு திரும்பல்களிற்கான வெளிப்படுத்தல் அல்லது உரிமைகள்.
- முதலீடு செய்யப்பட்டவர் மீது அவர்களது திரும்பல்கள் மீது தாக்கம் செலுத்துவதற்கான இயலுமை அல்லது அதன் அதிகாரங்கள்

பொதுவாக கட்டுப்பாட்டின் விளைவாகவே வாக்களித்தல் உரிமைகளில் அதிகமானவை தோன்றுகின்றது. இந்த தோன்றலுக்கு உதவுவதற்காகவும் குழுமம் வாக்களித்தலில் பெரும்பான்மைக்கு குறைவாக கொண்டிருக்கின்ற அல்லது முதலீடு செய்யப்பட்டவர்களின் ஒத்த உரிமை காணப்படுகின்ற போதும் அதற்கு முதலீடு செய்யப்பட்டவர்கள் மீது அதிகாரம் உள்ளதா என்பதனை மதிப்பிடுவதற்காக பின்வருவன உள்ளடங்கலாக அந்த சகல தொடர்புடைய விடயங்களையும் நிலமைகளையும் குழுமம் கருத்திற் கொள்கின்றது.

- முதலீடு செய்யப்பட்டவர்களின் ஏனைய வாக்குரிமை கொண்டுள்ளவர்களுடன் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகள்
- ஏனைய ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளிலிருந்து எழுகின்ற உரிமைகள்
- குழுமத்தின் வாக்களித்தல் உரிமைகள் மற்றும் எதிர்கால வாக்களித்தல் உரிமைகள்

மூன்று கட்டுப்பாட்டுக் கூறுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் மாற்றங்களைக் காட்டுகின்ற நிலமைகள் காணப்படுமாயின் உண்மையில் முதலீடு செய்யப்பட்டவர்கள் மற்றும் கட்டுப்பாடுகள் உள்ளனவா அல்லது இல்லையா என்பதனை குழுமம் மீள் மதிப்பீடு செய்யும். துணைக் கம்பனிகள் மீது கட்டுப்பாட்டினை குழுமம் பெறுகின்ற போதே துணைக் கம்பனிகளின் ஒன்றிணைத்தல் இடம் பெறுவதுடன் துணைக் கம்பனியின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்கின்ற போது அது கைவிடப்படுகின்றது. ஆண்டின் போது துணைக் கம்பனியொன்றின் ஈட்டுதல் அல்லது கை தவிர்த்தலின் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் என்பன துணைக் கம்பனியின் கட்டுப்பாட்டை குழுமம் ஈட்டிய திகதியிலிருந்து குழுமம் கட்டுப்பாட்டை இழக்கும் வரை ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றது.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் (ஓசீஐ) ஒவ்வொரு கூறும் இதன் விளைவாக கட்டுப்பாடற்ற ஆர்வத்தில் பற்றாக்குறை மீதி ஏற்படினும் குழுமத்தின் தாய்க் கம்பனியின் உரிமை பங்குதாரர்களுக்கும் கட்டுப்பாடற்ற ஆர்வமுள்ளவர்களிற்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. தேவையான போது, துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களுக்கு, குழுவினது கணக்கீட்டுக் கொள்கைகள் நிரலினுள் அவற்றின் கணக்கீட்டுக் கொள்கைகளில் கொண்டுவரும் பொருட்டு சீராக்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கூட்டிணைப்பின் நிமித்தம் குழுமம் முற்றாக இல்லாதொழிகையில் அங்கத்தவர்களிடையிலான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், உரிமைத்துவம், வருமானம், செலவினம் மற்றும் காசுப்பாய்ச்சல்கள் அவசியமானவிடத்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுகின்றது. கட்டுப்பாடொன்றின் இழப்பல்லாத துணைக் கம்பனியின் உரிமைத்துவ ஆர்வத்திலான மாற்றம் உரிமைத்துவக் கொடுக்கல் வாங்கலொன்றாக பதிவு செய்யப்படுகின்றது.

துணைக் கம்பனி ஒன்றின் மீதான கட்டுப்பாட்டை குழுமம் இழக்குமாயின் தொடர்புடைய சொத்துக்கள் (நன்மதிப்பு உள்ளடங்கலாக), பொறுப்புக்கள், கட்டுப்பாடற்ற ஆர்வம் மற்றும் உரிமைத்துவத்தின் ஏனைய கூறுகள் அங்கீகரிக்கப்படுவதுடன் இலாப நட்ட விளைவுகள் ஏதுமிருப்பின் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. தொடர்ந்தும் காணப்படுகின்ற எவையேனும் முதலீடுகள் சந்தை பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள், தாய்க் கம்பனியின் ஒத்த அறிக்கையிடல் காலத்திற்கு அமைய நிலையான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன.

ஒன்றித்தல் நோக்கத்தின் நிமித்தம், அண்டெ லெகோ மீற்றரிங் கம்பனி (ப்ரைவட்) லிமிற்றட் மற்றும் லெகோ ப்ரொஜெக்ட்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் என்பவற்றில் லெகோ நிறுவனம் வாக்களிக்கும் உரிமைகளின் பெரும்பான்மைத்துவத்தையும் அந்தக் கம்பனிகளில் கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளதால் அவை கம்பனியின் துணைக் கம்பனிகளாக கருதப்படுகின்றன.

2.1.3 நடைமுறை எதிர் நடைமுறையல்லாத வகைப்படுத்தல்

நடைமுறை/நடைமுறையல்லாத வகைப்படுத்தலின் அடிப்படையில் குழுமம் அதனுடைய நிதி நிலமைக் கூற்றில் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்களை முன்னிலைப்படுத்துகின்றது. சொத்தொன்று நடைமுறைச் சொத்தாக இருப்பது எப்போதெனில்:

- சாதாரண செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் தேறுமென எதிர்பர்க்கப்படுகின்ற அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படுகின்ற அல்லது நுகரப்படுகின்றவையாக இருத்தல்.
- பிரதானமாக வியாபார நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுபவையாக இருத்தல்.
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் தேறுமென எதிர்பார்க்கப்படுவையாக இருத்தல். அல்லது,
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான குறைந்தபட்சம் பன்னிரெண்டு மாதத்தினுள் பரிமாற்றம் செய்தல் அல்லது பொறுப்பொன்றை தீர்ப்பதிலிருந்து விடுபட்டதாகவுள்ள காசும் காசுக்கு சமனானவையாக இருத்தல்.

ஏனைய அனைத்துச் சொத்துக்களும் குழுமத்தினால் நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

பொறுப்பொன்று நடைமுறைப் பொறுப்பாக இருப்பது எப்போதெனில்:

- சாதாரண செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் தீர்ப்பதற்கு எதிர்பர்க்கப்படுகின்றவையாக இருத்தல்.
- பிரதானமாக வியாபார நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுதல்.
- அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுதல். அல்லது,
- குறைந்தபட்சம் அறிக்கையிடல் திகதியின் பின்னரான பன்னிரெண்டு மாதத்தினுள் காசு அல்லது ஏனைய சொத்துக்களின் பரிமாற்றத்தினால் பொறுப்பொன்றின் தீர்ப்பனவை பிற்போடுவதற்கு அறிக்கையிடல் திகதியில் உரிமை காணப்படாதிருக்கையில்.

ஏனைய அனைத்துப் பொறுப்புக்களும் குழுமத்தினால் நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

பிற்போட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

2.2 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

கம்பனியினதும் மற்றும் குழுவினதும் நிதிக் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்படுதல் வேண்டுமெனவும் அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான அத்தகைய கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்திற்கும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் என்பவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளுக்கும் அவ்வாறான முகாமைத்துவம் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றை மேற்கொள்ள வேண்டுமெனவும் தேவைப்படுத்தப்படுகின்றது.

எனினும், இந்த எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பன பற்றிய நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலங்களில் பாதிக்கப்படக்கூடிய சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் முன் கொணரப்படும் தொகைகளுக்கு பொருண்மையான ஒரு சீராக்கலைத் தேவைப்படுத்தும் பெறுபேறுகளைத் தோற்றுவிக்கக்கூடும்.

மதிப்பீடுகளும் மற்றும் முக்கியமான எடுகோள்களும் ஒரு நிகழ்கால அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்படும் காலப்பகுதியிலும் பாதிக்கப்படும் ஏதாவது எதிர்வரும் காலங்களிலும் இனங்காணப்படுகின்றன.

இடம் மற்றும் நிச்சயமற்றதன்மை காணப்படும் குழுமத்துடன் தொடர்புடைய ஏனைய வெளிப்படுத்தல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

- நிதிக் கருவிகளின் இடர் முகாமைத்துவம் மற்றும் கொள்கைகள் குறிப்பு 29
- நுணுக்கமான பகுப்பாய்வு வெளிப்படுத்தல்கள் குறிப்பு 24

தீர்ப்புகள்

குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையின் போது, ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் அங்கீகரித்த தொகைகளின் மீது பொருண்மையான தாக்கத்தை விளைவிக்கின்ற பின்வரும் தீர்ப்புகளை முகாமைத்துவம் மேற்கொண்டிருந்தது.

புதுப்பித்தல் மற்றும் இடைநிறுத்தல் மாற்றுவழிகளுடன் கூடிய ஒப்பந்தங்களின் குத்தகைக் காலத்தை நிச்சயித்தல் - குத்தைக்கு எடுப்போனாக குழுமம்

குத்தகைக் காலத்தை நீடித்தலை பயன்படுத்துவது நியாயமானதாக இருந்தால் அல்லது குத்தகைக் காலத்தை இடைநிறுத்துவதனை பயன்படுத்தாதிருப்பது நியாமானதாக காணப்பட்டால், மாற்றுவழியின் மூலம் ஏதேனும் காலப்பகுதி மேவுகை செய்யப்படுதலுடன் இணைந்ததாக, குத்தகை நிபந்தனைகளை இரத்துச் செய்யப்பட முடியாத குத்தகை நிபந்தனைகளாக குழுமம் நிச்சயிக்கின்றது.

குழுமம் காலநீடித்தல் மற்றும் இடைநிறுத்தல் மாற்றுவழிகளைக் கொண்ட அநேக குத்தகை ஒப்பந்தங்களை வைத்துள்ளது. அவற்றின் குத்தகைக் காலத்தை நீடிப்புச் செய்வதா அல்லது இடைநிறுத்துவதா நியாயமானது என்பதனை மதிப்பீடு செய்வதற்காக உரிய தீர்ப்பினை குழுமம் பிரயோகிக்கின்றது. அதாவது, காலத்தை நீடிப்புச் செய்வதா அல்லது இடைநிறுத்துவதா என்ற பொருளாதாரத் தூண்டலுடன் சம்பந்தப்பட்ட அனைத்துக் காரணிகளையும் குழுமம் கருத்திற்கொள்கின்றது. தொடக்கத் திகதியின் பின்னர், ஏதேனும் பொருண்மையான நிகழ்வு அல்லது மாற்றம் காணப்படுகின்றதா எனக் கண்டறிவதற்காக அதன் கட்டுப்பாட்டிலுள்ள குத்தகை நிபந்தனைகளை குழுமம் மீள்மதிப்பீடு செய்து அதற்கமைய அதனை காலநீடிப்புச் செய்வதா அல்லது இடைநிறுத்துவதா எனக் குழுமம் தீர்மானிக்கும். (உதாரணமாக, பொருண்மையான குத்தகை மேம்படுத்தல் நிர்மாணங்கள் அல்லது குத்தகைச் சொத்தின் பொருண்மையான நிலமைகள்)

அத்துடன், இடைநிறுத்தல் மாற்றுவழியினை உள்ளடக்கிய காலப்பகுதிகள் அவற்றை நியாயமாக பயன்படுத்தக்கூடாது என்று காணப்படின் மாத்திரம் குத்தகை நிபந்தனையின் ஒரு பகுதியாக உள்ளக்கப்படுகின்றது.

ஆதனக் குத்தகை வகைப்படுத்தல் - குழுமம் குத்தகை வழங்குவோனாக

குழுமம், அதனது முதலீட்டு ஆதனத் தொகுதியின் மீது வர்த்தக ஆதனக் குத்தகைகளில் கைச்சாத்திட்டுள்ளது. வணிக ஆதனத்தின் பொருளாதார வாழ்வின் ஒரு முக்கிய பகுதியை குத்தகைக் காலம் கொண்டிருக்காமை மற்றும் குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதி போன்ற கணிசமான விதிகள் மற்றும் நிபந்தணைகளின் மதிப்பீட்டு அடிப்படையில், வணிக ஆதனத்தின் நியாயமான பெறுமதியில் குழுமம் நிச்சயித்து, இச்சொத்துக்களின் உரிமையுடனான தற்செயலான அனைத்து ஆபத்துக்களையும் வெகுமதிகளையும் இது தக்கவைத்துக் கொள்கின்றது. இவ்வாறான ஒப்பந்தங்கள் செயற்பாட்டுக் குத்தகைளாக கணக்கீடு செய்யப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் இறுதிப் பெறுமதிகள், பயன்தரு பாவனைக்காலம் மற்றும் பெறுமானத்தேய்விடல் முறைகளை குழுமமும் கம்பனியும் மீளாய்வு செய்கின்றன. இந்தப் பெறுமதிகள், வீதங்கள், முறைகள் என்பன நிச்சயமற்றவையாகக் காணப்படுவதனால் இவற்றை மதிப்பீடு செய்வதற்கு முகாமைத்துவ தீர்ப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

மதிப்பீடுகளும் அனுமானங்களும்

அறிக்கையிடல் திகதியிலுள்ள எதிர்கால மற்றும் மதிப்பீட்டு நிச்சயமற்ற ஏனைய முக்கியமான ஆதாரங்கள் குறித்த முக்கியமான அனுமானங்கள், அடுத்த நிதியாண்டிற்குள் சொத்துக்கள் மற்றும் கடனைச் சுமந்து செல்லும் அளவுகளில் பொருண்மையான சீராக்கலை ஏற்படுத்தும் ஆபத்தைக் கொண்டவை. ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் அடிப்படையில் குழுமம் அதன் அனுமானங்களையும் மதிப்பீடுகளையும் மேற்கொள்கின்றது. இருப்பினும் எதிர்கால முன்னேற்றங்கள் குறித்த தற்போதைய சூழ்நிலைகள் மற்றும் அனுமானங்கள் என்பன குழுமத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சந்தை மாற்றங்கள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக மாற்றமடையக்கூடும். இத்தகைய மாற்றங்கள் அவை நிகழும்போது அனுமானங்களில் பிரதிபலிக்கின்றன.

குத்தகைகள் - அதிகரிக்கும் கடன் வட்டி வீதத்தை மதிப்பிடுதல்

குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதத்தை குழுமத்தினால் உடனடியாக தீர்மானிக்க முடியாதிருப்பதனால், குத்தகைப் பொறுப்புக்களை அளவிடுவதற்காக அதிகரிக்கும் வட்டி வீதத்தை (ஐபிஆர்) குழுமம் பயன்படுத்துகின்றது. ஐபிஆர் என்பது இதனையொத்த காலப்பகுதியில் அதேபோன்ற பாதுகாப்புடன், இதனையொத்த பொருளாதாரத்தில் பயன்படுத்துவதற்கான சரியான சொத்தொன்றிற்கு ஒத்த மதிப்புள்ள சொத்தைப் பெறுவதற்குத் தேவையான கடனைப் பெறுவதற்கு குழுமம் செலுத்த வேண்டிய வட்டி வீதமாகும். ஆகவே, ஐபிஆர் குழுமம் செலுத்தவேண்டிய தொகையினை பிரதிபலிக்கின்றது. இது கருத்திற்கொள்ள வேண்டிய வீதங்கள் கிடைக்காத போது (நிதிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடாத துணைக் கம்பனிகள் போன்ற) அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகளை பிரதிபலிப்பதற்காக அவற்றை சீராக்க வேண்டியிருக்கையில் இம்மதிப்பீடு தேவைப்படுகின்றது. உதாரணமாக, குத்தகைகள் துணைக் கம்பனியின் தொழிற்பாட்டு நாணயத்தில் இல்லாதபோது, குழுமம் ஐபிஆர் இனை கிடைக்கக்கூடியதாகவுள்ள அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளைப் (அதாவது சந்தை வட்டி வீதங்கள்

போன்றவற்றை) பயன்படுத்தி மதிப்பிடுவதுடன் சில நிறுவனங்கள் (துணைக் கம்பனியின் கடன் தரப்படுத்தல் நிலை போன்ற) குறித்த மதிப்பீடுகளை குறித்துரைத்த மதிப்பீட்டில் மேற்கொள்ள வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு

கம்பனி மற்றும் குழுமத்தினது காணியும் கட்டிடங்களும் நியாயப் பெறுமதியில் காண்பிக்கப்படுகின்றன. காணியினதும் கட்டிடங்களினதும் நியாயப் பெறுமதியினை நிச்சயிப்பதற்காக சுயாதீன பெறுமதியிடல் நிபுணர்களை குழுமம் ஈடுபடுத்துகின்றது.

வியாபாரப் பெறவேண்டியவை மற்றும் ஒப்பந்தச் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களிற்கான ஏற்பாடு

வியாபாரப் பெறவேண்டியவை மற்றும் ஒப்பந்தச் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களிற்கான ஏற்பாட்டினை (ஈசீஎல்) கணிப்பிடுவதற்காக குழுமம் மெற்றிக் முறையினை பயன்படுத்துகின்றது. ஏற்பாட்டு வீதங்கள் கடன் வெளிநிற்கும் காலத்தின் அடிப்படையில் காணப்படுகின்றது.

ஏற்பாட்டு மெற்றிக்ஸ் ஆரம்பத்தில் குழுமத்தின் வரலாற்றுரீதியாக அவதானிக்கப்பட்ட ஏய்ப்புச்செய்தல் வீதத்தின் அடிப்படையில் காணப்படுகின்றது. வரலாற்று கடன் நட்ட அனுபவத்தை முன்னோக்கிய தகவல்களுடன் சீராக்குவதற்காக குழுமம் மெற்றிக்ஸ் கணிப்பீட்டை செய்கின்றது. ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், வரலாற்று ரீதியாக அவதானிக்கப்பட்ட ஏய்ப்புச்செய்தல் வீதங்கள் புதுப்பிக்கப்பட்டு, முன்னோக்கிய மதிப்பீடுகளில் மாற்றங்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

வரலாற்று ரீதியாக அவதானிக்கப்பட்ட ஏய்ப்புச்செய்தல் வீதங்கள், முன்னறிவிப்புச் செய்யப்பட்ட பொருளாதார நிலைமைகள் மற்றும் ஈசீஎல் ஆகியவற்றுக்கு இடையிலான இணைவுக் குணகம் ஒரு குறிப்பிடத்தக்க மதிப்பீடாகும். ஈசீஎல் இன் அளவு சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட பொருளாதார நிலைமைகளில் தங்கியுள்ளது. குழுமத்தின் வரலாற்றுரீதியான கடன் நட்ட அனுபவம் மற்றும் பொருளாதார நிலைமைகளின் முன்னறிவிப்பு என்பன எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களின் உண்மையான ஏய்ப்புச்செய்தல் வெளிப்பாடாக இருக்காது.

ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி

அவதானிக்கக்கூடிய சந்தை விலையற்றதாக நிதிநிலைமைக் கூற்றுக்களில் காணப்படும் விற்பனைக்காக கிடைக்கக்கூடிய முதலீடுகள் என வகைப்படுத்தப்படும் நிதிசார்ந்த சொத்துக்களின் நியாயப் பெறுமதியானது விலையிடல் மதிப்பீட்டு நுட்பங்களைப் பிரயோகித்து நிர்ணயிக்கப்படுகின்றன. ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதிசார்ந்த சொத்துக்களின் பெறுமானங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 31 இல் மிக விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

அளவீடுகளை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட உள்ளீட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்ற நியாயப் பெறுமதி உயர்வரிசையினை பயன்படுத்தி, குழு நியாயப் பெறுமதியினை அளவிடுகின்றது. உயர்வரிசை நியாயப் பெறுமதி நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 31 இல் மிக விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

குறித்துரைத்த நலத் திட்டங்கள்

குறித்துரைத்த நலத் திட்டங்களின் கிரயம் மற்றும் அவற்றின் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமானம் ஆகியன உண்மையான விலை மதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன. உண்மையான விலைமதிப்பீடானது கழிவு வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் என்பன பற்றிய எடுகோள்களை உருவாக்குவதில் சம்பந்தப்படுகின்றது. இந்தத் திட்டங்களின் நீண்டகாலத் தன்மையின் காரணமாக, அத்தகைய மதிப்பீடுகள் கணிசமான நிச்சயமற்ற தன்மைகளுக்கு உட்பட்டுக் காணப்படுகின்றன. சகல எடுகோள்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

பொருத்தமான கழிவு வீதத்தை நிர்ணயிப்பதில், முகாமைத்துவம் அந்தக் குறித்துரைக்கப்பட்ட நலக் கடப்பாட்டின் எதிர்பார்க்கப்பட்ட காலத்தை ஒத்த முதிர்ச்சிகளுடன் கூடிய இலங்கை அரசாங்க முறிகளின் வட்டி வீதத்தைக் கருத்திற் கொள்கின்றது. இறப்பு வீதமானது வெளிப்படையாகக் கிடைக்கக்கூடிய இறப்பு வீத அட்டவணைகளின் அடிப்படையில் காணப்படுகின்றது. எதிர்கால சம்பள அதிகரிப்புகள் கம்பனியின் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பின் அடிப்படையில் காணப்படும்.

2.3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

2.3.1 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

அனைத்து வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களும் அந்தக் கொடுக்கல்வாங்கல்கள் செயல்வலுப் பெற்றிருந்த திகதிகளிலுள்ள நாணயமாற்று வீதங்களைப் பயன்படுத்தி புழக்கத்திலுள்ள இலங்கை ரூபா நாணயத்திற்கு பரிவரித்தனை செய்யப்படுகின்றன. அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள வெளிநாட்டு நாணயங்களில் எடுத்துரைக்கப்பட்ட நிதிசார்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அத்தகைய திகதியில் செயல்வலுப்பெறும் அதேவிடத்து நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி புழக்கத்திலுள்ள இலங்கை ரூபாவுக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன. வர்த்தகம் சாராத செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற சகல வித்தியாசங்களும் இலாப அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படுகின்றன.

2.3.2 வரிவிதிப்பு

நடைமுறை வரி

நடைமுறை மற்றும் முன்னைய காலப்பகுதி களுக்கான நடைமுறை வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்ட அல்லது அவரிடமிருந்து மீளறவிடப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட தொகையில் அளவிடப்படுகின்றன. அந்தத் தொகையைக் கணிப்பிடுவதற்கு பிரயோகிக்கப்படும் வரி வீதங்கள் மற்றும் வரி சார்ந்த சட்டங்கள் என்பன கம்பனி நாட்டில் கம்பனி இயங்கி வரி விதிக்கத்தகு வருமானத்தை ஈட்டுகின்றவிடத்து, சட்டவாக்கம் பெறுகின்ற அல்லது அறிக்கையிடப்படும் திகதியில் செயன்முறை ரீதியில் சட்டவாக்கம் பெறுகின்ற வரிவீதங்களாகவும் மற்றும் சட்டங்களாகவும் இருக்கும்.

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டவாறு 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கும் இணங்க கணிப்பிடப்பட்ட ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும். சேயற்பாட்டிலுள்ள அனைத்துக் கம்பனிகளும் 28 சதவீத வரிசெலுத்தல் பொறுப்பை கொண்டுள்ளன.

பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

சொத்துக்களினதும் மற்றும் பொறுப்புக்களினதும் வரி அடிப்படைகள் மற்றும் நிதிசார்ந்த அறிக்கையிடும் நோக்கங்களுக்காக அத்தகையவற்றின் கொணரப் படும் தொகைகளுக்கும் இடையில் அறிக்கையிடும் திகதியிலுள்ள சகல தற்காலிக வித்தி யாசங்களுக்கும் பொறுப்பு முறையினைப் பிரயோகித்து பிற்போடப்பட்ட வருமான வரிஏற்பாடு செய்யப்படுகின்றது. பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்புக்கள் பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர வரி விதிக்கத்தகு சகல வித்தியாசங்கள் தொடர்பிலும் இனங்காணப்படுகின்றன.

- கணக்கீட்டு இலாபம் அல்லது வரிவிதிக்கத்தகு இலாபம் அல்லது நட்டம் எதனையும் பாதிக்காத, கொடுக்கல் வாங்கல் நேரத்தில் ஒரு வர்த்தகத் தொடர்பில்லாத ஒரு கொடுக்கல்வாங்கலிலுள்ள ஒரு சொத்தின் அல்லது ஒரு பொறுப்பின் ஆரம்ப இனங்காணலில் இருந்து பிற்போடப்பட்ட வருமான வரி எழும் சந்தர்ப்பம், மற்றும்

- எதிர்வு கூறக்கூடிய எதிர்காலத்தில் அநேகமாக தற்காலிக வித்தியாசங்களை மீள்திருத்தப்படாத மற்றும் அந்தத் தற்காலிக வித்தியாசங்களின் மீள்திருத்தம் கட்டுப்படுத்தப்பட முடியாத நேரம் தவிர, உப கம்பனிகளிலுள்ள வட்டிகள் மற்றும் துணைக் கம்பனிகள் மற்றும் துணைத் தரப்புகள் என்பவற்றிலுள்ள முதலீடுகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட வரிவிதிக்கத்தகு வித்தியாசங்கள் காணப்படுகின்ற சந்தர்பபம்.

அநேகமாக கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்களுக்கு எதிராக கிடைக்கக்கூடியது என்ற அளவுக்கு கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள், முன்கொணரப்பட்ட பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரிநட்டங்கள் முதலிய அனைத்து அம்சங்கள் தொடர்பிலும் பிற்போடப்பட்ட வருமான வரிச்சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன. பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர, முன்கொணரப்பட்ட பயன்படுத்தப்படாத வரிக் கடன்களையும் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களையும் பயன்படுத்த முடியும்.

- பிற்போடப்பட்ட வருமான வரிகணக்கீட்டு இலாபம் அல்லது வரிவிதிக்கத்தகு இலாபம் அல்லது நட்டம் எதனையும் பாதிக்காத, கொடுக்கல்வாங்கல் நேரத்தில் ஒரு வர்த்தகத் தொடர்பில்லாத ஒரு கொடுக்கல்வாங்கலிலுள்ள ஒரு சொத்தின் அல்லது ஒரு பொறுப்பின் ஆரம்ப இனங்காணலில் இருந்து எழும் சந்தர்ப்பம், மற்றும்

- துணை நிறுவனங்கள் மற்றும் துணைத்தரப்புகள் என்பவற்றிலுள்ள முதலீடுகள், மற்றும் கூட்டுஸ்தாபனங்களிலுள்ள வட்டிகள் என்பவற்றுடன் தொடர்புடைய கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பில், எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் அநேகமாக தற்காலிக வித்தியாசங்கள் ஒதுங்கும் மற்றும் பயன்படுத்தக்கூடிய தற்காலிக

வித்தியாசங்களுக்கு எதிராககிடைக்கக்கூடிய வரி விதிக்கத்தகு இலாபம் காணப்படும் என்ற அளவுக்கு மாத்திரம் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் இனங்காணப்படுகின்ற சந்தர்ப்பம்.

பிற்போடப்பட்ட வருமான வரிச்சொத்துக்களின் கொணரப்படும் தொகையானது பயன்படுத்தப்பட வேண்டிய பிற்போடப்பட்ட எல்லா வருமான வரிச் சொத்துக்களை அல்லது அவற்றின் பாகத்தை அனுமதிக்கும் வகையில் கிடைக்கக்கூடிய போதிய வரிவிதிக்கத்தகு இலாபம் இல்லையென்ற அளவுக்கு, அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டுக் குறைக்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடப்படும் திகதி யிலுள்ளவாறு சட்டவாக்கம் பெற்றுள்ள அல்லது செயன்முறை ரீதி யில் சட்டவாக்கம் பெற்றுள்ளவரி வீதங்களின் (வரிசார்ந்த சட்டங்கள்) அடிப்படையில் சொத்து மாற்றப்படுகின்ற அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்ற போதுள்ள ஆண்டிற்கு ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன.

சொத்துக்களுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வரி ஏனைய முழுமையான வருமானத்தில் அல்லது நேரடியாக ஒப்புரவில் காணப்படும் முக்கியமான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் இனங்காணப்படு கின்றது.

பிற்போடப்பட்ட அந்த வரிகள் அதே வரிவிதிக்கத்தகு நிறுவனத்துடனும் மற்றும் அதே வரிவிதிப்பு அதிகாரத்துடனும் சம்பந்தப்படும் பட்சத்தில் நடைமுறை வரிப்பொறுப்புக்களுக்கு எதிரான நடைமுறை வரிச் சொத்துக்களை சமப்படுத்துவதற்கு சட்ட ரீதியில் நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருந்தால், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களும் சமப்படுத்தப்படுகின்றன.

விற்பனைகள் வரி

சொத்துக்களை அல்லது சேவைகளை கொள்வனவு செய்கையில் ஏற்படுகின்ற விற்பனை வரி விதித்தல்களை அதிகாரத்தரப்பிடமிருந்து வசூலிக்க முடியாதுள்ள சந்தர்ப்பத்தினைத் தவிர்த்து, வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்களுடன் சம்பந்தப்பட்ட விற்பனை வரிகள் அவற்றிலிருந்து கழிக்கப்பட்டு தேறிய தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் விற்பனை வரி செலவின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்டு குறித்த விற்பனை வரித் தொகையுடன் தொடர்புபடுகின்ற பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய செலவுகள் சொத்தின் பகுதியாக அங்கீகரிக்கப்படுகின்றது. வசூலிக்கக்கூடிய விற்பனை வரி மற்றும் அதிகாரிகளிற்கு செலுத்த வேண்டிய தொகை என்பன அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவற்றின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளன.

2.3.3 கடன்பெறுதல் கிரயம்

பாவனைக்கு அல்லது விற்பனைக்கு தயார்படுத்துவதற்கு அத்தியாவசிய ரீதியில் கணிசமான ஒரு காலப்பகுதியை நுகர்கின்ற ஒரு சொத்தின் கொள்வனவு, நிர்மாணம் அல்லது உற்பத்தி தொடர்பில் அதற்கு நேரடியாக சேரக்கூடிய கடன்பெறும் கிரயங்கள் அந்தந்தச் சொத்துக்களின் கிரயத்தின் பாகமாக மூலதனப்படுத்தப்படுகின்றன. ஏனைய சகல கடன்பெறும் கிரயங்களும் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் செலவினமாகக் கொள்ளப்படுகின்றது. நிதிகளை கடனாகக் பெறுவது தொடர்பில் ஒரு நிறுவனத்திற்கு ஏற்படுகின்ற வட்டிகள் மற்றும் ஏனைய கிரயங்கள் கடன்பெறும் கிரயத்தில் உள்ளடக்கப்படும்.

2.3.4 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானம்

குழுமம் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் மின்மானிகளை விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. பொருட்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாடு வாடிக்கையாளர்களிற்கு கைமாற்றப்படுகையில் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. இதன்மூலம் அப்பொருட்கள் அல்லது சேவைகளிற்கு ஈடாக உரிமை மாற்றப்படும் என்று குழுமம் எதிர்பார்க்கும் கருத்தை பிரதிபலிப்பதாக உள்ளது. குழுமம் பொதுவாக வருமானத்தை ஈட்டுவதே முதன்மையானது என முடிவுசெய்துள்ளது.

மின்சார விநியோகத்தின் மூலமான வருமானம், மின்சாரம் வடிக்கையாளர்களிற்கு வழங்கப்படும் நேரத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

மின்மானிகளை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் வருமானம் பொதுவாக ஒற்றைச் செயலாற்றல் கடப்பாடாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் சொத்தின் கட்டுப்பாடு வாடிக்கையாளர்களிற்கு மாற்றப்படுகையில் அதாவது பொதுவாக உபகரணம் விநியோகிக்கப்படுகையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

கொடுக்கல் வாங்கல் விலையின் ஒருபகுதியை ஒதுக்க வேண்டியது போன்ற (உதாரணமாக: உத்தரவாதம்) தனித்தனி செயலாற்றல் கடப்பாடுகளான ஏனைய வாக்குறுதிகள் ஒப்பந்தத்தில் காணப்படுகின்றனவா என்பதனை குழுமம் கருத்திற்

கொள்கின்றது. உபகரண விற்பனைக்கான கொடுக்கல் வாங்கல் விலையினை நிர்ணயிப்பதில், மாறுபட்ட தொகைகள், குறிப்பிடத்தக்க நிதியளித்தல் கூறு இருத்தல், பணமல்லாத விடயங்கள் மற்றும் வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் (ஏதேனுமிருப்பின்) ஆகியவற்றை குழுமம் கருத்திற்கொள்கின்றது.

மாறுபட்ட தொகைகள்

ஒப்பந்தமொன்றிலுள்ள தொகை முரண்பாடான தொகையொன்றாக காணப்படுமாயின், வாடிக்கையாளர்களிற்கு என்ன விலையில் பொருட்கள்.'.சேவைகளை கைமாற்றவேண்டும் என்பதனை குழுமம் பரிசீலனைசெய்து மதிப்பிடுகின்றது. முரண்பாட்டுத் தொகைகள் ஒப்பந்த தொடக்கத்தில் மதிப்பிடப்பட்டு முரண்பாடான தொகையுடன் தொடர்புடைய நிச்சயமற்றதன்மை பின்னர் தீர்க்கப்படுகையில் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானத்தின் அளவில் குறிப்பிடத்தக்க வருமானத்தை நீக்கவேண்டி ஏற்படாது என்பது மிகவும் சாத்தியமானவரை கட்டுப்படுத்தப்படுகின்றது.

குறிப்பிடத்தக்க நிதியளித்தல் கூறு

ஒப்பந்தத்தின் தொடக்கத்தில், வாக்குறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவையை வடிக்கையாளர்களிற்கு கைமாற்றப்படுவதுடன், வாடிக்கையாளர் அந்த நலனுக்காக பணம் செலுத்துகையில் அல்லது ஒரு குறிப்பிடத்தக்க நிதியளித்தல் கூறின் தாக்கம் ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவாக இருக்கையில் குழுமம் உறுதியளித்த தொகையினை சீராக்குவதில்லை.

ஒப்பந்த மீதிகள்

ஒப்பந்தச் சொத்துக்கள்

ஒப்பந்தச் சொத்து என்பது வாடிக்கையாளர்களிற்கு மாற்றப்படும் பொருட்கள் அல்லது சேவைகளிற்கு ஈடாக கருத்திற்கொள்வதற்கான உரிமையாகும். வாடிக்கையாளர் பரிசீலிப்பதற்கு முன்னர் அல்லது பணப் செலுத்தப்படுவதற்கு முன்னர் வாடிக்கையாளர்களிற்கு பொருட்கள் அல்லது சேவைகளை கைமாற்றுவதற்கு குழுமம் செயற்படுமாயின், நிபந்தனைக்கு உட்பட்டு ஈட்டிய வருமானத்தில் சொத்து அங்கீகரிக்கப்படுகின்றது.

வியாபார வருமதிகள்

வருமதிகள் என்பது நிபந்தனையற்ற பெறுமதியொன்றிற்கான குழுமத்திற்கு உள்ள உரிமையினைக் குறிக்கின்றது. (அதாவது, நிலுவையிலுள்ள தொகையினை செலுத்துவதற்கு மாத்திரமே நேரகாலம் தேவைப்படுகின்றது.)

ஒப்பந்தப் பொறுப்புக்கள்

ஒப்பந்தப் பொறுப்பு என்பது வாடிக்கையாளர்களிடமிருந்து பொருட்கள் அல்லது சேவைகளை கைமாற்றுவதற்கான கடப்பாடாகும். குழுமம் அதனைப் (கருத்திற்கொள்ள வேண்டிய தொகை) பரிசீலிக்கின்றது. குழுமம் பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு கைமாற்றுவதற்கு முன்னர் ஒரு வாடிக்கையாளர் அவற்றை பரிசீலித்தால், அதற்காக பணம் செலுத்தப்படுகையில் அல்லது கட்டணம் செலுத்தப்பட வேண்டுமாயின் (எது முதலில் நிகழ்கின்றது என்பதனை பொறுத்து) பொறுப்பு அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்தத்தின் கீழான செயலாற்றல் கடமைகளை குழுமம் நிறைவேற்றுகையில் ஒப்பந்தப் பொறுப்புகள் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதிசார் வருமானம்

அறவீடு ஐயத்திற்குரியதாக இல்லாவிட்டால் நிதிசார் வருமானம் வட்டிச் சம்பாத்தியமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

பங்கிலாபம்

பணம் பெறுவதற்கான குழுமத்திற்குரிய உரிமை ஏற்பட்டதும் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஏனைய வருமானம்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நுகர்வோர் பங்களிப்பு மீதான பிற்போட்ட வருமானம்

புதிய சேவை இணைப்புக்களை நிறுவதற்காக பொருத்தப்பட்ட சொத்துக்களின் கிரயத்தினை குறைப்பதற்காக

நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகள் பிற்போட்ட கடப்பாடுகளாக அங்கீகரிக்கப்படுகின்றன. புதிய சேவை இணைப்புச் சொத்துக்கள் 20 ஆண்டுகளில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. தொடர்புடைய நுகர்வோர் பங்களிப்புகள் அதனையொத்த 20 ஆண்டுகளிற்கு இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றப்படுகின்றன.

2.3.5 அருவச் சொத்துக்கள்

கணனி மென்பாகம்

கையேற்கப்பட்ட கணனி மென்பாக அனுமதிப்பத்திரங்கள் அவற்றை கையேற்பதற்கு ஏற்பட்ட கிரயத்தின் அடிப்படையில் மூலதனமாக்கப்படுவதுடன் குறித்த மென்பாகம் பாவனைக்கு எடுக்கப்படுகின்றது. இக்கிரயம் அவற்றின் பயன்தரு ஆயுட்காலமான 05 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது. கணனி மென்பாக நிகழ்ச்சித்திட்டங்களை பராமரிப்பதுடன் சம்பந்தப்பட்ட கிரயங்கள் குறித்த செலவினம் ஏற்படுகையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

தொழில்நுட்ப அறிவுத்திறன்கள்

2.3.6 இருப்புக்கள்

மெதுவாக நகர்கின்ற மற்றும் பழுதடைந்த இருப்பிற்கான ஏற்பாட்டினை மேற்கொண்ட பின்னருள்ள இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமானம் ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமானத்தில் கணிக்கப்படுகின்றன. தேறிய தேறக்கூடிய பெறுமானம் என்பது சாதாரண வணிக நடவடிக்கையில் மதிப்பிடப்பட்ட பொருளின் விற்பனை விலையிலிருந்து அதனை விற்பதற்கு ஏற்படவுள்ள செலவுகளைக் கழிக்கவரும் தொகையாகும்.

ஒவ்வொரு பொருளையும் அது இருக்கின்ற இடத்திற்குக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட கிரயங்கள் மற்றும் அவற்றின் நிலைமை பின்வரும் சூத்திரங்களைக் கொண்டு கணக்கீடு செய்யப்படுகின்றன.

தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பொருட்கள்	-	நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில்
வழிச்சரக்குகளும் ஏனையவையும்	-	உண்மைக் கிரயத்தில்
மூலப் பொருட்கள்	-	நிறையளித்த சராசரி அடிப்படையின் மீது உண்மைக் கிரயத்தில்
முடிவுப் பொருட்கள் மற்றும் குறைவேலைகள்	-	சாதாரண நிலமைகளில் பொருளை உற்பத்தி செய்வதற்கு ஏற்படுகின்ற நேர் பொருள், நேர் கூலி மற்றும் நிலையான உற்பத்தி மேந்தலையின் பொருத்தமான பகிர்வின் அடிப்படையில்.
வழிச்சரக்குகள்	-	உண்மைக் கிரயத்தில்

2.3.7 காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள்

நிதிநிலைமைக் கூற்றிலுள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் என்பன மூன்று மாதங்களுக்கு அல்லது அதற்குக் குறைந்த முதிர்ச்சியுடைய குறுங்கால வைப்புக்களையும் மற்றும் வங்கிகளிலுள்ள காசுகளையும் உள்ளடக்கியிருக்கும்.

குழுமத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் மேலே விவரிக்கப்பட்டவாறு வங்கியின் தேறிய மேலதிகப்பற்றுக்களையும் மற்றும் காசுகளையும், குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்கியிருக்கும்.

2.3.8 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

கிரய மாதிரி

இறையில் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தவிர, குழுவின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு கிரய மாதிரியைப் பிரயோகித்து, ஏதாவது திரண்ட நட்டம் மற்றும் குறைந்த திரண்டதேய்மானத்தின் பேரிலான ஏதாவது இடை நேர் செலவுகள் என்பன அடங்கலாக கொள்வனவின் அல்லது நிர்மானத்தின் கிரயத்தில் பதியப்படுகின்றது.

மீள்விலை மதிப்பீட்டு மாதிரி

குழுமம் இறையில் காணிகளினதும் கட்டிடங்களினதும் ஒட்டுமொத்தமான வகுதிகளுக்கு மீள்விலைமதிப்பீட்டு மாதிரியைப் பிரயோகிக்கின்றது. அத்தகைய சொத்துக்கள், அதனைத் தொடர்ந்து சேர்ந்த ஏதாவது நட்டங்கள் மற்றும் ஏதாவது குறைந்த தேய்மானம் என்பன அந்த மீள்விலை மதிப்பீட்டுத் திகதியில் நியாய விலைப் பெறுமானமாக விருக்கின்றரு மீள்விலை மதிக்கப்பட்ட தொகையில் எடுத்துரைக்கப்படுகின்றன. குழுவினது இறையில் காணிகளும் கட்டிடங்களும், முன்கொணரப்படும்

தொகைகள் அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள நியாய விலைப் பெறுமானங்களிலிருந்து பொருண்மையானளவில் வித்தியாசப்படக் கூடாது என்பதை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மீள்விலை மதிக்கப்படுகின்றன. ஒரு சொத்தினது மீள்விலை மதிப்பீட்டின் பேரில் முன்கொணரப்படும் தொகையிலுள்ள ஏதாவது அதிகரிப்பு மூலதன ஒதுக்கத்தின் கீழுள்ள திரண்ட ஒப்புரவிலும் மற்றும்ஏனைய முழுமையான வருமானத்திலும்இனங்காணப் படுகின்றது அல்லது இலாப அல்லது நட்டக் கணக்குக்குக் கொண்டுவரப்பட்ட அதே சொத்து தொடர்பான ஒரு முன்னைய மீள்விலைமதிப்பீட்டுக் குறைவுக்கான ஒதுக்கத்தை மேற்கொள்வதற்கு பிரயோகிக்கப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில், அத்தகைய அதிகரிப்பானது முன்னர் பதிவழிக்கப்பட்ட அளவுக்கு வருமான மாக இனங்காணப்படுகின்றது.

முன்கொணரப்பட்ட தொகையிலுள்ள ஏதாவது குறைவு இலாப அல்லது நட்டக் கணக்கில் ஒரு செலவாக இனங்காணப்படுகின்றது அல்லது அந்தச்சொத்து தொடர்பான மூலதன ஒதுக்கத்திலிருக்கின்ற ஏதாவது கடன் நிலுவையின் அளவுக்கு ஏனைய முழுமையான வருமானத்தில் பற்றுவைக்கப்படுகின்றது. ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்ட குறைவு மூலதன ஒதுக்கங்களின் கீழுள்ள ஒப்புரவில் காணப்படும் திரண்ட தொகையில் குறைவை ஏற்படுத்தும். ஒரு சொத்து தொடர்பான மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கத்திலுள்ள ஏதாவது நிலுவை அந்தச் சொத்தின் அகற்றலின் அல்லது ஓய்வின் பேரில் நிறுத்தி வைக்கப்பட்ட சம்பாத்தியங்களுக்கு நேரடியாக மாற்றப்படும்.

தொடர்ந்து வரும் கிரயம்

ஒரு சொத்தின், ஒரு பொறித்தொகுதியின், ஒரு உபகரணத்தின் ஒரு பாகத்தை மீளிடுவதற்காக ஏற்படும் ஆகுசெலவானது அந்தப் பாகத்தினுள் பதிந்திருக்கின்ற எதிர்கால பொருளாதார நன்மைகள் அநேகமாக குழுவுக்கு கிடைக்கும் மற்றும் அதன் கிரயம் நம்பத்தகுந்தளவில் அளவிடப்பட முடியும் என்றிருந்தால் முன்கொணரப்படும் தொகை யில் இனங்காணப்படுகின்றது. சொத்துக்களின், பொறித்தொகுதிகளின், உபகரணங்களின் நாளாந்த பராமரிப்பு கிரயங்கள் ஏற்பட்டவாறு இலாப அல்லது நட்டத்திற்கு சாட்டப்படுகின்றது.

அங்கீகரிக்காதிருத்தல்

ஒரு சொத்தின், ஒரு பொறித்தொகுதியின், ஒரு உபகரணத்தின் கொணரப்படும் தொகையானது அகற்றலின் அல்லது அந்தச்சொத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் ஏதுமில்லை என்பதன் பேரில் இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. ஒருசொத்தின், ஒரு உபகரணத்தின், ஒரு பொறித்தொகுதியின் இனங்காணாது விட்டு விடுவதிலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டம் அத்தகைய சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் போது இலாப அல்லது நட்டக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது.

மீளிடுகை கிரயங்கள் ஒரு சொத்தின், ஒரு பொறித்தொகுதியின், ஒரு உபகரணத்தின் கொணரப்படும் தொகையில் இனங்காணப்படுகின்ற போது, மீளிடப்பட்ட பாகத்தின் எஞ்சியிருக்கின்ற கொணரப்படும் தொகை இனங்காணாது விட்டுவிடப்படுகின்றது. சோதனையிடல் தொடர்பான பாரிய கிரயங்கள் மூலதனப்படுத்தப்படுகின்றன. அத்தகைய ஒவ்வொரு மூலதனப்படுத்தலிலும், அத்தகைய சோதனையிடல்களின் முன்னைய கிரயத்தினது எஞ்சியிக்கின்ற கொணரப்படும் தொகை இனங்காணாது விட்டுவிடப்படுகின்றது.

பெறுமானத்தேய்வு

குழுவினால் வித்தியாசமான வகை நட்டங்கள் அனுபவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற சொத்தினது எதிர்கால பொருளாதார நன்மைகளின் மாதிரியினது அடிப்படையில் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனை காலத்திற்கு பொருத்தமான காலப்பகுதிற்கு, நேர் நிரல் அடிப்படையில் பின்வரும் வீதங்களில், சொத்துக்கள் பாவனைக்குக் கிடைக்கக்கூடிய திகதியிலிருந்து அகற்றப்படும் திகதி வரை குழு தேய்மான ஏற்பாட்டை மேற்கொள்கின்றது. காணிகள் தொடர்பில் தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை.

ஒரு சொத்தின் தேய்மானம் அந்தச் சொத்து விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படும் திகதிற்கு அல்லது அந்தச் சொத்து இனங்காணாது விட்டுவிடப்படும் திகதிற்கு முன்னரே நீங்கிவிடும். சொத்து முழுமையாக தேய்மானம் கணிப்பிடப்படாத வரையில் அந்தச் சொத்து பயனற்று முடங்கிக் கிடக்கும் அல்லது துல்லியமான பாவனையிலிருந்து ஓய்வடையும் போது தேய்மான ஏற்பாடு நீங்கிவிடாது.

குழு பயன்படுத்திய பிரதான வருடாந்தத் தேய்மான வீதங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கட்டிடங்கள்	2.5%
உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கல்	
உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் இ.மி.ச. பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட உபமின் நிலையங்கள், தலைக்கு மேலுள்ள மின்சார வழிகள் மற்றும் மின்சார சேவை வழிகள்	10%
லெகோ நிறுவனம் நிர்மாணித்த உப-மின் நிலையங்கள், தலைக்கு மேலுள்ள மின்சார வழிகள் மற்றும் மின்சார சேவை வழிகள்	4% - 5%
மோட்டார் வாகனங்கள்	5% - 20%
கணனிகள்	20% - 33 1/3%
அலுவலக உபகரணங்கள்	15% - 33 1/3%
பொறி மற்றும் இயந்திராதிகள்	25% - 33 1/3%

2.3.9 நிதிசார்ந்த கருவிகள்

ஓர் நிதிக் கருவி என்பது ஒரு நிறுவனத்தினது நிதிச் சொத்ததிற்கும் மற்றொரு நிறுவனத்தின் நிதிப் பொறுப்பிற்கு அல்லது உரிமைத்துவ கருவிக்கும் வழிவகுக்கும் எந்தவொரு ஒப்பந்தமுமாகும்.

2.3.9.1 நிதிசார்ந்த சொத்துக்கள்

ஆரம்ப அங்கீகப்பும் அளவீடும்

நிதிச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பில் வகைப்படுத்தப்பட்டு, அதன்பின்னர், ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ஓசீஐ) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக காலத்தேய்மானக் கிரயத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

நிதிச் சொத்துக்களின் ஆரம்ப அங்கீகார வகைப்படுத்தலானது நிதிச் சொத்தின் ஒப்பந்த பணப்புழக்க பண்புகள் மற்றும் அவற்றை நிர்வகிப்பதற்கான குழுமத்தின் வணிக மாதிரியை பொருத்து அமைந்திருக்கும். ஒரு குறிப்பிடத்தக்க நிதிக் கூறுகளைக் கொண்டிருக்காத வியாபார அறவிடுதல்களைத் தவிர்த்து அல்லது குழுமம் நடைமுறைக்கேற்றவாறு பயன்படுத்தியவற்றைத் தவிர்த்து, ஒரு நிதிச் சொத்தின் கொடுக்கல் வாங்கல் கிரயங்கள், குறிப்பிடத்தக்க நிதிக் கூறுகளைக் கொண்டிருக்காத வியாபார அறவிடுதல்கள் என்பவற்றை இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக ஆரம்பத்தில் அவற்றின் நியாயமான பெறுமதியில் குழுமம் மதிப்பிடுகின்றது.

ஒரு நிதிச் சொத்து வகைப்படுத்தப்பட்டு, அதனை ஓசீஐ ஊடாக காலத்தேய்மானக் கிரயத்தில் அல்லது நியாயமான பெறுமதியில் அளவிடுவதற்கு, அதன் எஞ்சிய தொகையின் அடிப்படையில் அசல் மற்றும் வட்டி மாத்திரமே செலுத்தப்படுவதற்கான காசுப் பாய்ச்சலிற்கு (எஸ்பிபிஐ) வழிவகுத்தல் வேண்டும். இந்த மதிப்பீடு எஸ்பிபிஐ பரிசோதனை என அழைக்கப்படுவதுடன் ஒரு கருவி மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்றது.

நிதிச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கான குழுமத்தின் வணிக முறை காசுப் பாய்ச்சல்களை உருவாக்குதல் என்பது குழுமம் அதன் நிதிச் சொத்துக்களை எவ்வாறு நிர்வகிக்கின்றது என்பதனைக் குறிக்கின்றது. ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரித்தல், நிதிச் சொத்துக்களைவ ிற்பனை செய்தல் அல்லது இவை இரண்டும் காசுப் பாய்ச்சலை ஏற்படுத்துமா என்பதனை வணிக முறை தீர்மானிக்கின்றது. சந்தையிலுள்ள ஒழுங்குமுறை அல்லது உடன்பாட்டால் (வழமையான வியாபார வழிமுறைகள்) நிறுவப்பட்ட ஒரு கால எல்லைக்குள் சொத்துக்களை விநியோகிக்க வேண்டியுள்ள நிதிச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையானது அதனை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு உறுதியளித்த திகதியில் அதாவது வியாபாரம் இடம்பெறும் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றது.

தொடர்ந்துவரும் அளவீடு

நிதிசார்ந்த சொத்துக்களின் தொடந்துவரும் அளவீடு பின்வருமாறு நான்கு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றது.

- காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)
- அங்கீகரிக்காதிருக்கும் திரண்ட நயங்கள் மற்றும் நட்டங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதன் மூலம் ஓசீஐ ஊடான நியாயப் பெறுமதியிலுள்ள நிச்சயிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் (உரிமைத்துவ கருவிகள்)
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள்

காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் (கடன் கருவிகள்)

இந்த வகை குழுமத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையது. பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படுமாயின், குழுமம் நிதிச் சொத்துக்களை காலத்தேய்வுக் கிரயத்தில் அளவிடுகின்றது.

- காசுப் பாய்ச்சலை சேகரிக்கும் நோக்குடன் வணிக முறையில் வைத்திருக்கப்படும் ஒரு நிதிச் சொத்ததாக காணப்படுதல், மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த விதி முறைகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலிற்கு வழிவகுத்து அவை அசல் மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை மட்டுமே செலுத்துகின்றனவாக காணப்படுதல்.

காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள் பின்னர் பயனுள்ள வட்டிவீத (ஈஐஆர்) முறையினைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் அவை நட்டக்கழிவிற்கு உட்படுகின்றன. சொத்தானது அங்கீகரிக்காது, மாற்றியமைக்கப்படாது அல்லது நட்டக்கழிவு அடையும் போது இலாபம் அல்லது நட்டத்தில் நயங்களும் நட்டங்களும் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமத்தின் காலத்தேய்வுக் கிரயத்திலுள்ள நிதிச் சொத்துக்கள், காசு, குறுங்கால வைப்புக்கள், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்யவைகளை உள்ளடக்குகின்றது.

ஓசீஐ ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள்

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், குழுமம் அதன் உரிமைத்துவ முதலீடுகளை ஐஏஎஸ் 32 - நிதிக் கருவிகளின் முன்னிலைப்படுத்தல் மற்றும் விற்பனைக்காக வைத்திருக்காதவை என்பதன் கீழ் வரைவிலக்கணப்படுத்தியுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்கையில் ஓசீஐ இன் ஊடாக நியாயப் பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட உரிமைத்துவக் கருவிகளாக வகைப்படுத்துவதற்கு தெரிவுசெய்யலாம். வகைப்படுத்தலானது கருவிக்குக் கருவி என்ற அடிப்படையில் நிச்சயிக்கப்படுகின்றது.

இந்த நிதிச் சொத்துக்களின் நயங்களும் நட்டங்களும் ஒருபோதும் இலாபம் நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை. நிதிச் சொத்தின் ஒரு பகுதியை மீட்டெடுத்தல் போன்ற வருமானங்களிலிருந்து குழுமம் நலன் பெறுவது தவிர்ந்த, பணம் செலுத்துவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படுகையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பங்கிலாபம் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. அத்தகைய ஆதாயங்கள் ஓசீஐ இல் பதிவுசெய்யப்படுகின்றது. ஓசீஐ ஊடாக நியாயமான பெறுமதியில் நிச்சயிக்கப்பட்ட பங்கிலாபம், கருவிகளின் காலக்கழிவு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதில்லை.

குழுமம் இந்த வகையின் கீழுள்ள அதன் பட்டியலிடப்படாத பங்கு முதலீடுகளை கைமாற்ற முடியாதவையாக தெரிவு செய்கின்றது.

அங்கீகரிக்காதிருத்தல்

நிதிசார்ந்த ஒரு சொத்து (அல்லது, நிதிசார்ந்த ஒரு சொத்தின் ஒருபாகம் அல்லது அது போன்ற நிதிசார்ந்த சொத்துக்களின் ஒரு தொகுதி பொருத்தமானவிடத்து)

- காலாவதியாகிய சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமைகள் இரு க்கின்ற போதும்

- குழு, அத்தகைய சொத்திலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக்கொடுத்துள்ளது அல்லது ஹஒரு பாரப்படுத்தலுடடான' ஏற்பாட்டின் கீழ், ஒரு மூன்றாந்தரப்புக்கு பொருண்மையான தாமதமின்றி, தனக்குக் கிடைத்த காசுப்பாய்ச்சல்களை முழுமையாக செலுத்துவதற் கான ஒரு கடப்பாட்டைப் பொறுப்பேற்றுள்ளது எனும் போதும், இல்லையெனில் பின்வரும் இரண்டிலொரு விதத்தில், (அ) குழு, சொத்தின் சகல விதமான பொறுப்புக்களையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுத்துள்ளது, அல்லது. (ஆ) குழு, அவ்வாறு சொத்தின் சகல விதமான பொறுப்புகளையும் மற்றும் சொத்துக்கள் வழங்கல்களையும் கணிசமானளவில் மாற்றிக் கொடுக்கவோ அல்லது பித்துவைக்க வோ இல்லையென்றாலும், சொத்தின் மீதுள்ள கட்டுப்பாட்டை மாற்றிக் கையளித்துள்ளது எனும் போதும்,இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது.

குழு, ஒரு சொத்திலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றிக் கொடுத்துள்ளது அல்லது பாரப்படுத்தலூடான ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது எனும் போது, அது உரிமைத்துவத்தில் எந்தளவு ஆபத்தினையும் வெகுமதியினையும் வைத்துள்ளது என்பதனை குழுமம் மதிப்பிடுகின்றது.

அது கைமாற்றப்பட்டோ அல்லது வைத்திருக்கப்பட்டோ இல்லாத வேளையில், அதனைத்தொடர்ந்து சொத்தின் அனைத்து ஆபத்துக்களும் வெகுமதிகளும் சொத்தின் கைமாற்றப்பட்ட கட்டுப்பாடாவதில்லை. குழுமம் அதனை எந்தளவு தூரம் கைமாற்றமுடிகின்றதோ அதன்படி அங்கீகரிக்கின்றது. அந்த வேளையில், குழுமம் அதனுடன் தொடர்புடைய பொறுப்புக்கலையும் அங்கீகரிக்கின்றது. கைமாற்றப்பட்ட சொத்தும் அதனுடன் சார்ந்த பொறுப்புக்களும் குழும் கொண்டுள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை வெளிப்படுத்தும் விதத்தில் அளவிடப்படுகின்றன. கைமாற்றப்பட்ட சொத்தின் மீது உத்தரவாதம் என்ற ரீதியில் தொடர்கின்றவை சொத்தின் முன்கொணரப்படும் தொகை மற்றும் குழுமம் அதற்காக மீளளிக்கப்பட வேண்டிய தொகை ஆகிய இரண்டிலும் குறைந்ததில் அளவிடப்படுகின்றது.

நிதிச் சொத்துக்களின் நட்டக்கழிவு

நிதிசார் கருவிகள் மற்றும் ஒப்பந்தச் சொத்துக்கள்

கம்பனி/ குழுமம் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களிற்கான (நுஊடுள) நட்டப் படிகளை பின்வருமாறு அங்கீகரிக்கின்றது.

- நிதிச் சொத்துக்கள் காலத்தேய்வுக் கிரயத்தில் அளவிடப்பட்டுள்ளன.
- கடன் முதலீடுகள் மற்றும்
- ஒப்பந்தச் சொத்துக்கள் FVOCI இல் அளவிடப்பட்டுள்ளன.

12 மாதகால ECLs இல் அளவிடப்படுகின்ற பின்வருவனவற்றைத் தவிர்த்து, கம்பனி/ குழுமம் ECLs இன் வாழ்க்கைக் காலத்திற்குச் சமனான தொகையொன்றில் நட்டப் படிகளை அளவிடுகின்றது.

- அறிக்கைத் திகதியில் குறைவான கடன் இடர் கொண்டவையாகக் கருதப்பட்ட கடன் பிணைகள்
- ஆரம்ப அங்கீகரித்தல் முதல் கடன் இடர் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்காதுள்ள (அதாவது, நிதிக் கருவியின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் முழுவதும் கடன் தீர்க்காதிருப்பதற்கான இடர்) ஏனைய கடன் பிணைகளும் வங்கி மீதிகளும்

வியாபாரப் பெறவேண்டியவைகளிற்கான இழப்பு அனுமதித்தல்கள் ECLs இன் ஆயுள் காலத்திற்குச் சமமான தொகையில் எப்போதும் அளவிடப்படுகின்றது.

ஆரம்ப அங்கீகரித்தல் முதல் கடன் இடர் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்காதுள்ளது என நிச்சயிக்கையிலும் நுஊடுள இனை மதிப்பிடுகையிலும், கம்பனி.்.குழுமம் கியரமோ அல்லது சிரமோ இன்றி கிடைக்கக்கூடிய தொடர்புடைய நியாயமான மற்றும் உறுதுணையாகவுள்ள தகவல்களைக் கருத்திற்கொள்கின்றது. இத்தகவல்கள் பண்புரீதியான மற்றும் அளவீட்டு ரீதியான தகவல்களை உள்ளடக்குவதுடன் கம்பனி/குழுமத்தின் வரலாற்று அனுபவங்கள் மற்றும் எதிர்காலத் தகவல்கள் உள்ளிட்ட அறிவிக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

பின்வரும் நிலைமைகளில் நிதிச் சொத்துக்களைக் கையாழ்தல் வேண்டுமென கம்பனி/குழுமம் கருதுகின்றது.

- கடன் பெற்றவர் அவருக்குய கடன் கடப்பாடுகளை கம்பனி.்.குழுமத்திற்கு முழுமையாகச் செலுத்த வாய்ப்பில்லாத நிலையில் பிணையத்தை தேறச்செய்தல் போன்ற நடவடிக்கைகளிற்கு கம்பனி/குழுமத்தினால் (ஏதேனும்) நடவடிக்கை எடுத்தல், அல்லது
- நிதிச் சொத்து 90 நாட்களிற்கு மேல் நிலுவையாகவுள்ள சந்தர்ப்பத்தில்

ஆயுட்கால ECLs என்பவை நிதிக் கருவியொன்றின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் முழுவதற்கும் கடன் தீர்க்கப்படாதிருப்பதற்கான அனைத்து சாத்தியமான நிகழ்வுகளும் கொண்ட ECLs ஆகும்.

ECLs இனை அளவிடுதல்

ECLs எப்பேதும் கடன் இழப்புக்களின் நிகழ்தகவு நிறையளித்த மதிப்பீடாகும். கடன் இழப்புக்கள் அனைத்து காசுப் பற்றாக்குறைகளின் தற்போதைய பெறுமதியில் (அதாவது ஒப்பந்தப் படி நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்பட வேண்டிய காசுக்கும், பெறுவதற்கு கம்பனி எதிர்பார்க்கின்ற காசு உட்பாய்ச்சலிற்கும் இடையிலான வேறுபாடாகும்.) அளவிடப்படுகின்றன.

நிதிச் சொத்தின் தாக்கமுள்ள வட்டி வீதத்தின் அடிப்படையில் ECLs கழிவுநீக்கம் செய்யப்படுகின்றன.

நிதி நிலைமைக் கூற்றில் ECLs இற்கான படியினை சமர்ப்பித்தல்

காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்களிற்கான இழப்புப் படிகள், சொத்தின் மொத்த முன்கொண்டுசெல் தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றன.

FVOCI இலுள்ள கடன் பிணையங்களிற்கான இழப்புப் படியானது, இலாபம் அல்லது நட்டத்திற்கு சாட்டப்பட்டு OCI இல் அங்கீகரிக்கப்படுகின்றது

பதிவழித்தல்

நிதிச் சொத்தின் மொத்த முன்கொண்டுசெல் தொகை பெறப்படும் என்பதற்கான நியாயமான எதிர்பார்ப்புகள் காணப்படாத வேளையில் கம்பனி அந்த நிதிச் சொத்தை பதிவழிக்கின்றது. தனிப்பட்ட வாடிக்கையாளரைப் பொறுத்தவரை, கம்பனியின் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் அந்த நிதிச்சொத்து 360 நாட்களிற்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருக்கையில்

கம்பனி அதனைப் பதிவழிக்கின்றது. நிறுவன ரீதியான வாடிக்கையாளர்களைப் பொறுத்தமட்டில், அவற்றிற்குரிய நிதிச் சொத்தினை பதிவழிப்பதற்கு முன்னர் அறவிடுவதற்கான நியாயமான எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றனவா என கம்பனி ஒவ்வொரு நிறுவனமாக மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. பதிவழிக்கப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு குறிப்பிடத்தக்க எதிர்பார்ப்பு காணப்படாதிருப்பின் மாத்திரமே அவற்றை கம்பனி பதிவழிக்கின்றது. இருப்பினும், பதிவழிக்கப்பட்ட தொகையினை அறவிடுவதற்கு தன்னாலான சகல முயற்சிகளையும் கம்பனி தொடர்ந்து மேற்கொள்கின்றது.

2.3.9.2 நிதிசார்ந்த பொறுப்புக்கள்

ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

நிதிசார்ந்த பொறுப்புக்கள் ஆரம்ப இனங்காணலும் அளவீடும் பொருத்தமானவாறு இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாகவும், கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் அல்லது பயனுள்ள ஒரு தளத்தில் தள சாதனங்களாக குறித்தொதுக்கப்பட்ட பாராதீனப்படுத்த முடியாதவை என்பவற்றினூடாக நியாய விலைப் பெறுமானத்தில் நிதிசார்ந்த பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

நிதிசார்ந்த சகல பொறுப்புக்களும் அடிப்படை ரீதியில் நியாய விலைப் பெறுமானத்தில் இனங் காணப்படுகின்றன. கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள், ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்கள் என்பவற்றை பொறுத்த வரையில் கழிக்கப்பட்ட ஆகுசெலவில் இனங்காணப்படுகின்றன.

வியாபார மற்றும் ஏனைய கொடுமதிகள், வங்கிமேலதிகப் பற்றுக்கள் என்பன அறிக்கையிடப்படும் திகதிற்கான குழுவின் நிதிசார்ந்த பொறுப்பில் உள்ளடங்கும்.

தொடர்ந்து வரும் அளவீடு

நிதி சார்ந்த பொறுப்புக்களின் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகுதியில் தங்கியிருக்கும்.

கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள்

ஆரம்ப இனங்காணலின் பின்னர், வட்டியை சுமந்து வருகின்ற கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் என்பன அதனைத் தொடர்ந்து செயல்வலுப் பெற்றிருக்கின்ற வட்டி வீத முறையியலைப் பிரயோகித்து கழிவுநட்டக் கிரயத்தில் அளவிடப்படுகின்ற இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்ற அதே நேரம் பொறுப்புக்கள் செயல் வலுப்பெற்றிருக்கின்ற வட்டி வீத முறையியல் (EIR) கழித்தல் படிமுறையினூடாக இனங்காணப்படுகின்றன.

